# வன்முறைக்கு எதிரான ஜிஹாத்

## சமாதானத்துக்கான முஸ்லிம் பெண்களின் போராட்டம்

# வன்முறைக்கு எதிரான ஜிஹாத்

சமாதானத்துக்கான முஸ்லிம் பெண்களின் போராட்டம்

தமிழாக்கம்
**எம். எம். றாசிக்**


WISE

**Muslim Women's Research and Action Forum (MWRAF)**
**73/19E, Kirulapone Avenue, Colombo-5, Sri Lanka**
*With*
**Muslim Women's Shura Council (WISE)**
**475 Riverside Drive Suite 248**
**New York, NY 10115**

MUSLIM WOMEN'S RESEARCH AND ACTION FORUM
1986

**வன்முறைக்கு எதிரான ஜிஹாத் :**

**சமாதானத்துக்கான முஸ்லிம் பெண்களின் போராட்டம்**

(**Jihad Against Violence**: Muslim Women's Struggle for Peace)

தமிழாக்கம்: எம். எம். றாசிக்

முதற் பதிப்பு : 2011

© Muslim Women's Research and Action Forum

**ISBN : 978-955-625-039-8**

வெளியீடு:

Muslim Women's Research and Action Forum (MWRAF)
73/19E, Kirulapone Avenue
Colombo - 5 Sri Lanka.
Phone : 0094 11 2512352
Fax: 0094 11 4405902
Email: mwraf@sltnet.lk
Web : www.mwraf.org

ஆங்கில வெளியீடு:

Muslim Women's Shura Council
475 Riverside
Drive Suite 248
New York, NY 10115
Phone : (212) 870-2552
Fax: (212) 870-2540
Web: wisemuslimwomen.org

வெளியீட்டு உதவி:

WDP (Women Defining Peace)
10/4 Don Carolis Road,
Colombo 5 Sri Lanka.
Email: wdp@wusc.lk

# வன்முறைக்கு எதிரான ஜிஹாத்

## உள்ளடக்கம்

| | | |
|---|---|---|
| I. | அறிமுகம் | 1 |
| II. | வீட்டு வன்முறையும், மறுதலித்தலும் | 8 |
| III. | வன்முறைத் தீவிரவாதமும், மறுதலித்தலும் | 18 |
| IV. | எல்லா வகையான வன்முறைகளுக்கும் இடையிலான தொடர்புகள் | 29 |
| V. | முடிவுரை | 34 |
| VI. | உசாத்துணை நூல்கள் | 45 |

## Acknowledgement

“Jihad Against Violence” is a publication of the Muslim Women’s Shura Council, a global advisory council of Muslim women scholars, activists, and specialists. The American Society for Muslim Advancement (ASMA) is the parent organization of the Muslim Women’s Shura Council. Both give permission to Muslim Women’s Research and Action Forum (MWRAF) to translate “Jihad Against Violence” into Tamil, and to reproduce, and disseminate the text. (To find out more about the work of the Muslim Women’s Shura Council, visit: www.wisemuslimwomen.org/about/shuracouncil/.)



ASMA and the Muslim Women’s Shura Council do not accept responsibility for the correctness of the Tamil text: in case of doubt, the authentic English text shall prevail. ASMA retains copyright ownership over “Jihad Against Violence” and all Muslim Women’s Shura Council documents. The above acknowledgment and indication of copyright ownership by ASMA must accompany any future translations, reproductions, or editions of Jihad Against Violence.



**Perin Gurel, PhD**

*Senior Program Associate, Shura Council*
*Women’s Islamic Initiative in Spirituality and Equality (WISE)*
*American Society for Muslim Advancement*
*475 Riverside*
*Drive Suite 248*
*New York, NY 10115*
*Phone: (212) 870-2552*
*Fax: (212) 870-2540*
*perin@asmasociety.org*
*www.asmasociety.org*
*www.wisemuslimwomen.org*

# உறுதியுரை

“வன்முறைக்கு எதிரான ஜிஹாத்” எனும் வெளியீடானது முஸ்லிம் மகளிருக்கான சூறா சபையின் வெளியீடாகும். இது முஸ்லிம் பெண் புலமையாளர்கள், செயற்படுனர்கள் மற்றும் நிபுணர்களைக் கொண்ட உலகளாவிய மதியுரைக் கவுன்சிலாகும். முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கான அமெரிக்க சமுதாயமானது (ASMA) முஸ்லிம் மகளிருக்கான சூறா சபையின் தாய் நிறுவனமாகும். “வன்முறைக்கு எதிரான ஜிஹாத்” எனும் வெளியீட்டினைத் தமிழில் மொழிபெயர்ப்பதற்கும் அதனை மீள்பதிப்புச் செய்து விநியோகிப்பதற்கும் இந்த இரண்டு அமைப்புக்களும் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணிக்கு (MWRAF) அனுமதி வழங்கியுள்ளன. (முஸ்லிம் மகளிருக்கான சூறா சபையின் மேலதிக பணிகள் பற்றிப் பார்வையிடுவதற்குத் தயவு செய்து www.wisemuslimwomen.org/about/shuracouncil எனும் இணையத்தளத்திற்கு விஜயம் செய்யவும்.)

தமிழ்மொழிமூலமான மேற்படி நூலின் செம்மைக்கு முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கான அமெரிக்க சமுதாயம் பொறுப்பேற்காது. நூலின் செம்மை பற்றி ஏதேனும் சந்தேகம் ஏற்படும் பட்சத்தில், ஆங்கில மொழி மூலமான உரையே மேலோங்கி நிற்கும். “வன்முறைக்கு எதிரான ஜிஹாத்” மற்றும் முஸ்லிம் மகளிருக்கான சூறா சபையின் சகல ஆவணங்களினதும் பதிப்புரிமை முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கான அமெரிக்க சமுதாயம் எனும் அமைப்பிற்கே உரித்தானதாகும். அத்தோடு, பிரசுரிக்கப்படவிருக்கும் “வன்முறைக்கு எதிரான ஜிஹாத்” பற்றிய ஏதாவது மொழிபெயர்ப்புக்கள், மீள்பிரசுரங்கள் அல்லது பதிப்புக்கள் என்பவை முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கான அமெரிக்க சமுதாய அமைப்பின் பதிப்புரிமை பற்றிய குறிப்பினையும் பிரசுரிப்பதற்கு அவர்கள் வழங்கிய இணக்கத்தினையும் அதனகத்தே கொண்டிருக்க வேண்டும்.

**Perin Gurel, PhD**

*Senior Program Associate, Shura Council*
*Women's Islamic Initiative in Spirituality and Equality (WISE)*
*American Society for Muslim Advancement*
*475 Riverside*
*Drive Suite 248*
*New York, NY 10115*
*Phone: (212) 870-2552*
*Fax: (212) 870-2540*
*perin@asmasociety.org*
*www.asmasociety.org*
*www.wisemuslimwomen.org*

# வெளியீட்டுரை

சகல துறைகளும் வேகமாக வளர்ச்சி கண்டுவரும் இவ்வுலகில் சமூகங்களுக்கிடையேயும் குடும்பங்களுக்கிடையேயும் வன்முறைகளும் தப்பபிப்பிராயங்களும் அதிகரித்து வருகின்றமையை யாவரும் அறிவீர்கள். குறிப்பாக உலக வரலாற்றில் எல்லாக் காலகட்டங்களிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் அடக்குமுறைகளும் இடம்பெற்று வந்திருக்கின்றமையை யாரும் மறுக்க முடியாது.

இஸ்லாமும் இந்த வன்முறைக்கு எதிராகப் பலவழிகளிலும் போராடி வந்திருக்கின்றது. குறிப்பாக, சமூக வாழ்க்கையிலும் குடும்ப வாழ்க்கையிலும் ஆண்களும் பெண்களும் தத்தமது உரிமைகளுடன் வாழவேண்டும் என்று இஸ்லாம் பணிக்கின்றது. பெண்கள், சமுதாயத்தில் மதிப்புக்குரியவர்கள் என்று வலியுறுத்தும் இஸ்லாம், அவர்களுக்கு எதிரான வன்முறைகளையும் வன்மையாகக் கண்டிக்கின்றது. இந்த அடிப்படையில் இஸ்லாமியக் கோட்பாடுகளுக்குப் பிழையான வியாக்கியானம் செய்து பெண்களை சமுதாயத்திலும் வீட்டிலும் வன்முறைக்கு உட்படுத்தும் சில கோட்பாடுகளுக்குத் தெளிவான விளக்கத்தைக் கொடுக்கின்றது.

மேலும் இஸ்லாம் பெண்களை வன்முறைக்கு உட்படுத்துவதைத் தூண்டுகின்றது என்று இஸ்லாத்தைப் பற்றிப் பிழையான அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கும் விமர்சகர்களது தப்பபிப்பிராயத்தையும் இது நீக்குகின்றது.

ஆங்கிலத்தில் ஏற்கனவே WISE நிறுவனத்தினர் வெளியிட்டு, அதனைத் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்வதற்கு அனுமதி வழங்கிய WISE முஸ்லிம் பெண்கள் சூறா கவுன்சிலுக்கும் எமது நன்றிகளைக் கூறுவதோடு, இதனை தமிழில் மொழிபெயர்க்க உதவிய எம். எம். றாசிக் அவர்களுக்கும் எமது நன்றியை கூறிக்கொள்கின்றோம். மேலும், இதனை அச்சிட்டு வெளியிட உதவிய WDP நிறுவனத்திற்கும் எமது பாராட்டுக்களையும் நன்றிகளையும் கூறிக்கொள்கின்றோம். இந்நூலினை வெளியிடுவதற்கு உதவிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இந்நூல் வெளியீட்டின் நோக்கம் நிறைவடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அன்பேரியா ஹனிபா**
இணைப்பாளர்
முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி
கொழும்பு

# அத்தியாயம் - I

## அறிமுகம்

### A. பிரகடனம்

வன்முறை என்பது உலகெங்கிலும் பல்வேறு கலாசாரங்களையும் சமுதாயங்களையும் பாதித்துள்ள ஒரு பொது அம்சமாகும். அது பல இலட்சக்கணக்கான முஸ்லிம்களின் வாழ்க்கையில் என்றும் நிலைத்திருக்கும் யதார்த்தமாகி அவர்களை அரசியல், சமய, கலாசார, பொருளாதாரத் துறைகளில் முன்னேறவிடாது தடுத்துக்கொண்டிருக்கிறது. உலகளாவிய ரீதியில் தமது குடும்பத்திலும் சமுதாயத்திலும் நாடுகளிலும் முஸ்லிம் பெண்கள் முன்னேறுவதற்கு உள்ள அவர்களது ஆற்றலை இது அழிக்கின்றது. குறிப்பாக, வன்முறைத் தீவிரவாதமும் வீட்டு-வன்முறையும் தனிப்பட்ட வாழ்வையும் குடும்ப வாழ்வையும் சமூக வாழ்வையும் தொடர்ந்தும் அழித்துக்கொண்டிருக்கின்றது. இது இவ்வாறு வன்முறையால் அகௌரவப்படுத்தப்பட்டு வருந்திக்கொண்டிருக்கும் மக்களுக்கு இழைக்கப்படும் வெளிப்படையான அநீதியாகவும் இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கும் அதன் போதனைகளுக்கும் எதிரானதாகவும் இருக்கும் அதேவேளை துரதிஷ்டவசமாக அத்தகைய வன்முறையை நியாயப்படுத்தும் ஒரு போர்வையாகத் தவறாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

ஆகவே, ஆன்மீகத்துக்கும் சமத்துவத்துக்குமான பெண்களின் இஸ்லாமிய முன்னெடுப்புக்கள் மன்ற (WISE) உறுப்பினர்களாகிய நாமும் அதன் முஸ்லிம் பெண்களின் சூறா கவுன்சிலும், நீதி, நேர்மை, சமத்துவம் என்பன இஸ்லாத்தின் அடிப்படை விழுமியங்கள் என்ற எமது நம்பிக்கைக்கு ஏற்ப பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்றோம்.

(1) அல்லாஹ் (இறைவனின்) வின் பிரதிநிதிகள் என்ற வகையில் இவ்வுலக வாழ்வில் பாதுகாப்பும் சமாதானமும் நிலவுவதற்கு வன்முறையின் சகல வடிவங்களையும் நாம் எதிர்த்துப் போராட வேண்டும்.

(2) வன்முறைத் தீவிரவாதமும் வீட்டுவன்முறையும் குர்ஆனும் திருத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களும் கூறுவதற்கு ஏற்ப இஸ்லாமியக் கோட்பாட்டின் பிரகாரம் மிகத்தெளிவான ஊழல்கள் ஆகும்.

(3) வன்முறைத் தீவிரவாதமும் வீட்டுவன்முறையும் மனித கௌரவத்துக்கான உரிமையை மீறுகின்றன. ஷரீஆவின் ஆறு முக்கிய நோக்கங்களில் (மகாஸித்) ஒன்றான இவ்வுரிமை மீறப்படுவதால் பெண்களும் மற்றோரும் பாதிக்கப்படுகின்றனர்.

(4) வன்முறைத் தீவிரவாதமும் வீட்டுவன்முறையும் சமூகத்தில் ஒவ்வொருவரும் அனுபவிக்க வேண்டிய சமாதானத்தையும் பாதுகாப்பையும் தருகின்ற அடிப்படை உரிமையை மீறுவதோடு வீட்டில் நிலவ வேண்டிய அமைதியையும் பறித்துக் கொள்கின்றது.

(5) வன்முறைத் தீவிரவாதமும் வீட்டுவன்முறையும் பல்வேறு காரணிகளின் விளைவாக ஏற்படுகின்றன. ஆகவே, முஸ்லிம்கள் இன்று இஸ்லாமிய வழிமுறைக்குள் இருந்து அஹிம்சை, சாத்வீகம், சமாதானம் பற்றிய கலந்துரையாடலை முன்னெடுப்பது முக்கியமானதாகும்.

(6) இஸ்லாம் என்றால் பூரணமாக்குதல், சமாதானத்தை ஏற்படுத்துதல், பாதுகாப்பை ஏற்படுத்துதல், நல்வாழ்வை ஏற்படுத்துதல் எனப் பொருள்படும். ஆகவே, முஸ்லிம் குடும்பங்களும் சமுதாயமும் சமாதானமும் பாதுகாப்பும் அபிவிருத்தியும் உடையனவாக ஆக்கப்படுதல் வேண்டும்.

(7) குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் இடையேயும் தனிப்பட்ட, பொது வன்முறைகளுக்கு இடையேயும் காணப்படுகின்ற தொந்தரவை ஏற்படுத்தும் தொடர்பைப் பற்றி மேலும் ஆய்வுகள் நடைபெற வேண்டும்.

இது எமது *வன்முறைக்கு எதிரான ஜிஹாத்.*

## B. வன்முறைத் தீவிரவாதத்தை நாம் ஏன் நிராகரிக்க வேண்டும்?

*“நன்மையும் தீமையும் சமமாகிவிடாது. (ஆதலால் நபியே) எது மிக அழகானதோ அதைக்கொண்டு தீமையைத் தடுத்துக் கொள்வீராக! அப்பொழுது எவருக்கும் உமக்குமிடையே பகைமை இருந்ததோ அவர் உம்முடைய உற்ற சிநேகிதரைப் போல் ஆகிவிடுவார்.” (41:34)*

இஸ்லாமியப் போதனைகள் சமூகத்தில் அமைதியையும் கூட்டுறவையும் ஒன்றிணைந்து செயல்படுவதையும், சுபீட்சத்தையும் தோற்றுவித்து மக்களை ஒற்றுமைப்படுத்த நாடுகின்றன. மறுபுறம் வன்முறைத் தீவிரவாதம் தனிநபர்களையும் குடும்பங்களையும் சமுதாயங்களையும் சிதைத்து அவர்கள் தமது சமூக, ஆன்மீக ஆற்றல்களை முழுமையாக வளர்த்துக்கொள்ள இடமளியாது அவர்களைப் புறந்தள்ளுகின்றது; அது சமூகங்களை முடமாக்குகின்றது; சமூக உறவுகளுக்கிடையில் அவநம்பிக்கையையும் பொறுமையின்மையினையும் தோற்றுவிக்கின்றது; வன்முறைத் தீவிரவாதம் முழு உலகிலும் இஸ்லாத்தின் நற்பெயருக்கும், அதன் புகழுக்கும் களங்கம் கற்பிக்கின்றது; குர்ஆனைப் பற்றியும் திருத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களது வழிமுறையைப் பற்றியும் பாரிய கருத்து வேறுபாட்டைப் பரப்புகின்றது.

## C. வீட்டுவன்முறையை நாம் ஏன் நிராகரிக்க வேண்டும்?

*"பயபக்தியுள்ள மனிதரைத் தவிர வேறெவரும் பெண்களைக் கௌரவமாகக் கருதமாட்டார். அவ்வாறே மரியாதைக் குறைவான ஒரு மனிதரைத் தவிர வேறெவரும் பெண்களை இழிவாகக் கருதமாட்டார்" (முஹம்மத் (ஸல்) - திர்மிதி)*

திருத்தூதரின் வாழ்க்கை உன்னதத்துக்கும் நீதிக்கும் கௌரவத்துக்குமான ஒரு சிறந்த முன்மாதிரியாகும். அவருடைய வாழ்க்கையில் பெண்கள் மீதோ குடும்பத்தினர் மீதோ வன்முறை என்றும் இருந்ததில்லை. அதற்குப் பதிலாக அவர்கள், சிறுவர்களையும் பெண்களையும் மிக்க மரியாதையுடனும் அன்போடும் நடத்தினார்கள். வன்முறையைத் தனிப்பட்டதென்றும் பொதுவானதென்றும் பிரித்துப் பாாக்க முடியாது. ஏனெனில், சில சமயங்களில் ஒரு வீட்டில் நடக்கும் தனிப்பட்ட வன்முறை வெறுமனே ஒரு வீட்டில் நடக்கும் சிறு தவறுபோல் தென்பட்டாலும், அது முதலில் தனிநபர்களுக்கிடையிலும் தொடர்ந்து குடும்பத்தினுள்ளும் தோன்றி அடுத்த தலைமுறைக்கும் நஞ்சாகக் கசிந்து, பின்னர் சமூகத்திலும் பாதிப்பை ஏற்படுத்திவிடும். குடும்பம் என்பது ஒரு சிறு சமுதாயமாகும். நாம் பாதுகாப்பான குடும்பங்களை வளர்த்துக் கொண்டோமானால் சமுதாயத்தை வளர்த்தெடுக்க முடியும். அவ்வாறே பெண்கள், கண்ணியப்படுத்தப்படாத குடும்பங்கள் செயலற்றுப் போவதைப் போன்றே சமுதாயமும் செயலற்றுப் போய்விடும்.

## D. வன்முறைத் தீவிரவாதத்தையும் வீட்டுவன்முறையையும் நாம் ஏன் பேசத் தேர்ந்தெடுத்துக் கொண்டோம்.

*"எவரொருவர் மற்றோர் ஆத்மாவின் கொலைக்குப் பிரதியாகவோ அல்லது பூமியில் (உண்டாகும்) குழப்பத்தி (னைத் தடைசெய்வத) ற்காகவோ தவிர, வேறெந்தக் காரணங்களுக்காகவும் கொலை செய்கிறாரோ அவர் மனிதர்கள் யாவரையும் கொலை செய்தவர் போலாவார் என்றும், எவர் அதனை வாழவைக்கின்றாரோ அவர் மனிதர்கள் யாவரையுமே வாழ வைத்தவர் போலாவார் என்றும் இஸ்ராயீலின் மக்களின் மீது நாம் விதியாக்கி விட்டோம்." (5:32)*

மிக முக்கியமான விளக்கங்களுடனும் விமர்சன ரீதியாக ஆராய்ந்தும் முஸ்லிம் பெண்கள் சூரா கவுன்ஸிலானது சமூகத்தில் மிகுந்த அழுத்தத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கு, இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கு அமைவாகப் புனிதமான உத்திகளைக் கையாண்டு பொருத்தமான சமூக மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றது. வன்முறைத் தீவிரவாதமும் வீட்டுவன்முறையும் பெண்கள் மீதும் சமூகத்தின் மீதும் பரவலாகத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்றன. இஸ்லாம் தொடர்பான பகிரங்கக் கலந்துரையாடல்களின்போது வன்முறைக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் மிக அதிகமானதாகும். ஆகவே, முஸ்லிம் பெண்கள் என்ற வகையில் நாம் இந்த முக்கியமான பிரச்சினை குறித்து எமக்குள்ள பொறுப்பை உறுதிப்படுத்தி, இத்தால் வன்முறைக்கு எதிரான ஜிஹாதைப் பிரகடனம் செய்கிறோம்.

அத்தோடு, பலர் வீட்டுவன்முறையையும் வன்முறைத் தீவிரவாதத்தையும் இரண்டாகப் பிரித்துப் பார்க்கிறார்கள். ஆனால், நாமோ இவ்விரு வன்முறை வடிவங்களுக்கும் இடையில் தொடர்பைக் காண்கிறோம். ஆகவே, "**வன்முறைக்கு எதிரான ஜிஹாத்**", வன்முறைத் தீவிரவாதத்தையும வீட்டுவன்முறையையும் ஒன்றையொன்று உந்தித் தள்ளும் வெளிப்படையான வன்முறையின் சகல வடிவங்களாகும் என்ற நிலைப்பாட்டில் நின்று ஆராய்கிறது.

## E. முஸ்லிம் பெண்கள் ஏன் இதுபற்றிப் விசேடமாக பேச வேண்டும்?

*"விசுவாசங்கொண்ட ஆண்களும் விசுவாசங்கொண்ட பெண்களும் அவர்களில் சிலர் சிலருக்கு உற்ற காரியஸ்தர்களாயிருக்கின்றனர். அவர்கள் பிறரை நன்மையைக்கொண்டு ஏவுகிறார்கள், (மார்க்கத்தில் மறுக்கப்பட்ட) தீமையை விட்டும் விலக்குகிறார்கள், தொழுகையையும் நிறைவேற்றுகிறார்கள், ஸகாத்தையும் கொடுத்து வருகிறார்கள், அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கீழ்ப்படிந்து நடக்கிறார்கள். இத்தகையோர் - அல்லாஹ் அவர்களுக்கு அருள் புரிவான் - நிச்சயமாக அல்லாஹ் (யாவரையும்) மிகைத்தவன், தீர்க்கமான அறிவுடையவன்" (9:71)*

முஸ்லிம் பெண்களின் உரிமைகள், செயற்பாங்கு, பொறுப்புக்கள் சார்ந்த அழுத்திக் கொண்டிருக்கும் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுவதை இலட்சிய நோக்காகக் கொண்ட முஸ்லிம் சூரா கவுன்ஸில் முஸ்லிம் பெண்கள் என்ற ரீதியில் தனக்கே உரிய தனித்துவத்தோடும் உறுதியான பார்வையோடும், அநீதியும் வன்முறையும் எந்த வடிவத்தில் இருந்தாலும் அவற்றைச் சமாதானமாகவும் வன்முறை சாராதும் எதிர்ப்பதற்கான சந்தர்ப்பத்தைக் கோருகின்றது.

வீட்டுவன்முறைக்கும் வன்முறைத் தீவிரவாதத்திற்கும் எதிராகப் பலர் பேசியுள்ள போதிலும், வன்முறையினால் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் பற்றி உண்மையில் செவிமடுக்கப்படாமலேயே இருந்து வருகின்றது.

அனுதாபமற்ற நிறுவனங்கள் அவர்களை அமைதிப்படுத்துவதன் மூலமோ அல்லது அவர்களது கதைகளைச் சொல்லத் தவறும் ஆர்வமற்ற ஊடகங்கள் மூலமோ அவர்கள் பொதுவாக ஊமையாக்கப்பட்டுள்ளனர். ஆகவே, அதற்குப் பகரமாக நாம் சமாதானத்தை ஏற்படுத்துபவர்கள், தலைவர்கள், கவனிப்பவர்கள் மற்றும் ஆசிரியர்கள், புனித போதனைகளிலும் சட்டத்திலும் பாண்டித்தியம் பெற்றவர்கள் என்ற எமது வளமான மரபுப் பின்னணியில் இருந்து எமது கருத்தை முன்வைக்கிறோம். எமது சகாக்களுடனும் அங்கத்தவர்களுடனும் சேர்ந்து தொழிற்படுவதன் மூலம் முஸ்லிம் சமூகத்தின்பால் சமத்துவக் கொள்கைகளையும் அத்தோடு சமூக, பொருளாதார, அரசியல் நீதியையும் முன்னெடுப்பதற்காக எமது அதிகாரபூர்வமான அவ்வெற்றிடத்தை மீட்டெடுப்போம்.

## F. சூரா வழியை ஏன் நாம் தேர்ந்தெடுத்தோம்?

*"இன்னும் அவர்கள் எத்தகையோர் என்றால், தங்கள் இரட்சகனின் கட்டளைகளை ஏற்றுத் தொழுகையையும் நிறைவேற்றுவார்கள். (இத்தகையோர்) இவர்களின் காரியமோ தங்களுக்குள் கலந்தாலோசித்தலாக இருக்கும். நாம் அவர்களுக்கு அளித்தவற்றிலிருந்து தர்மமாகச் செலவும் செய்வார்கள்." (42:38)*

கூட்டாக நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்காக முக்கியமான தீர்வுகளை மேற்கொள்ள, கலந்து பேசவும் ஒத்துழைக்கவும் சூரா செயன்முறை பயன்படுகிறது. நாம் இந்த சிறந்த முறையையே எமது பார்வையை விரிவுபடுத்தவும் வேறுபட்ட பல்வேறு குழுக்களுடன் கலந்துரையாடவும் தெரிவு செய்துள்ளோம்.

இஸ்லாமிய அடிப்படையில் குர்ஆன், சுன்னா ஆகியவற்றுக்கு ஏற்பவும் இஸ்லாமிய மரபைப் பேணியும் 21 ஆம் நூற்றாண்டின் பிரஜைகள் என்ற வகையில் இஸ்லாமிய மானிடவியல்கள், சமூக விஞ்ஞானங்கள் மற்றும் குறிப்பிட்ட அடிப்படை நூற்கருத்துக்களினடிப்படையிலும் நாம் மிகவும் விரிவான நிபுணத்துவத்தைப் பயன்படுத்துகிறோம். வன்முறையைக் குறைத்து சமாதானத்தை ஏற்படுத்த எல்லா மக்களுடனும் - ஆண்கள், முஸ்லிம் அல்லாதவர்கள் உட்பட அனைவருடனும் - ஒன்றுபட்டு உரையாடல் மூலம் வேலை செய்யக்கூடிய ஒரு 'கலந்துரையாடல் சட்டகத்தைக்' கையாள்கிறோம்.

## G. வன்முறைக்கு எதிரான ஒரு ஜிஹாத் ஏன்?

*"விசுவாசங்கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள். மேலும், அவன்பால் நெருங்குவதற்குரிய வழியை (வணக்க வழிபாடுகள் மூலம்) தேடிக்கொள்ளுங்கள். மேலும், அவனுடைய பாதையில் யுத்தம் செய்யுங்கள். அதனால் நீங்கள் வெற்றியடையலாம்." (5:35)*

"ஜிஹாத்" என்றால் அல்லாஹ்வின் பாதையில் முயற்சி செய்தல் அல்லது கஷ்டப்பட்டுப் பிரயத்தனம் செய்தல்" என்பதாகும். வன்முறைத் தீவிரவாதத்திலிருந்து வீட்டுவன்முறைவரை உள்ள விரிந்த பரப்புக்குள் வன்முறை எந்த வடிவில் இருந்தாலும் குறிப்பாக, இஸ்லாத்தின் பெயரால் மேற்கொள்ளப்படும் வன்முறையை எதிர்த்துப் போராட நாம்

அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். முஸ்லிம் பெண்களாகிய நாம், பலம் வாய்ந்த ஏகோபித்த குரலில் வன்முறைக்கு எதிராக எமது எதிர்ப்பைப் பிரகடனப்படுத்தி, எமதுகலாசார, புத்திசாதுரியமான, சமய அதிகாரத்தை மீளப்பெற வேண்டும்.

பொதுவாக, அநீதியை எதிர்ப்பதற்கும் குறிப்பாக, சிறப்பாக வன்முறையை எதிர்ப்பதற்கும் பெண்கள் என்ற வகையில் தனிச்சிறப்புடனும், சமாதானமாகவும் எதிர்க்கும் எமது கடப்பாட்டை விளக்க வேண்டும். பல்வேறு கருத்துக்களங்களிலும் வன்முறையை எதிர்ப்பதைப்பற்றி ஆழமாகவும் பூரணமாகவும் அணுக வேண்டும்.

நாம் இருக்கின்ற நிலையில் இருந்து கொண்டே எமது சிறுவர்களையும் சமுதாய அங்கத்தவர்களையும் எமது சமய நம்பிக்கைக்கு மாற்றமான விளக்கங்களைப் பெறுவதிலிருந்தும் அவற்றின் பங்காளர்களாக வருவதிலிருந்தும் பாதுகாத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுமட்டுமன்றி, வன்முறையை வெற்றிகரமாக முறியடிக்க நிறுவனங்களையும் அமைப்புக்களையும் நிறுவி, அவற்றை இயக்கும் நுட்ப முறைகளையும் ஏனைய முறைமைகளையும் அமைத்துச் செயற்பட வேண்டும். எனவே முஸ்லிம் பெண்களினால் நடத்தப்படுகின்ற ஆயிரக்கணக்கான ஒழுங்கமைப்புக்கள் வன்முறையை ஒழிப்பதற்காகத் தினமும் வெற்றிகரமாக உழைத்து வருகின்றன. குர்ஆனில் கூறப்பட்டுள்ளவாறு நன்மையை நிலைநாட்டவும் தீமையைத் தடுக்கவும் எமது தனிப்பட்ட முயற்சிகளை ஒன்றிணைத்து, இத்தகைய முயற்சிகளை நாம் ஆதரிக்க வேண்டும்.

மிகவும் முக்கியமாக நாம் சமாதானத்தை உறுதிப்படுத்த வேண்டும். நம்மிடையே கரைபுரண்டோடும் கருணை, நீதி, சமாதானம் ஆகியவற்றின் ஒப்பற்ற சக்தியோடு துணிச்சலுடனும் புத்திசாதுரியமாகவும் சிந்தித்து, பேசி, செயற்பட வேண்டும்.

இதுவே தான் வன்முறைக்கு எதிரான ஜிஹாத்.

# அத்தியாயம் - II

## வீட்டுவன்முறையும், மறுதலித்தலும்.

சில முஸ்லிம்கள் அல்குர்ஆன் ஸுூரா 4:34 ஆம் வசனத்தின் அடிப்படையில் வீட்டுவன்முறையை பொறுத்துக் கொள்கின்றனர். அதேபோல வேறு சில முஸ்லிமல்லாதோர் 4:34 ஐச் சுட்டிக்காட்டி, இஸ்லாம் பெண்களை பாலியலுக்கும் வன்முறைக்கும் உட்படுத்துகின்றன என்று நிந்திக்கின்றனர். இவ்விரு சாராரும் இந்த வாசகம் விசேடமாகக் கணவன்மாருக்குத் தமது மனைவிமார்களை அடிக்கும் அல்லது குறைந்தது சரீர தண்டனை வழங்கும் உரிமையை வழங்குகின்றது எனக் கருதுகிறார்கள்.

பல ஆங்கில மொழிபெயர்ப்புக்களில் இவ்வசனத்தின் இரண்டாம் அரைப் பகுதி பின்வருமாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

> *"அவர்களில் எவர்களின் மாறுபாட்டை அஞ்சுகிறீர்களோ அப்போது அவர்களுக்கு நல்லுபதேசம் செய்யுங்கள். (திருந்தாவிடின்) படுக்கைகளிலும் அவர்களை வெறுத்து (ஒதுக்கி) விடுங்கள். அதிலும் திருந்தாவிடின் அவர்களை (காயமேற்படாது) அடியுங்கள். (யுழ்ரிபுனா)."*

முதற்பார்வையில் இந்த வாசகம் வெளிப்படையானதாக இருக்கலாம். ஆனால், அதனைச் சரியாகப் பிரயோகித்துக் கருத்தை விளங்குவதற்கு நாம் பல காரணிகளைக் கருத்திற்கொள்ள வேண்டும். அவ்வாறு பார்க்கும்போதுதான் "இஸ்லாத்தில் வீட்டு வன்முறைக்கு இடமளிக்கப்பட்டுள்ளது" என்ற கருத்து முற்றாக மறுக்கப்படுவதை நாம் விளங்கிக் கெள்ளமுடியும்.

1. "*ழரப*" என்ற சொல்லின் மொழியியல் பகுப்பாய்வு
2. நுஷூஸ் என்பதன் கருத்தில் காணப்படும் மயக்கம்
3. குர்ஆனின் கருத்துக்களுக்கு இடையிலான பகுப்பாய்வு
4. குர்ஆன் விடுக்கும் பொதுச் செய்தி
5. திருத்தூதரின் உதாரணம்
6. *மகாஸித் அல்-ஷரீஆ*
7. வரலாற்று ரீதியிலான கருத்தும் சில வழக்கங்களைப் படிப்படியாக நீக்கும் குர்ஆனுடைய வழிமுறையும்.

4:34 என்ற வசனத்தில் வரும் "*ழரப*" என்பதன் கருத்து 'அடித்தல்' என நவீன காலத்துக்கு முற்பட்ட சட்டவல்லுநர்கள் பெருமளவில் விளங்கியிருந்தார்கள் என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். அவர்களுடைய முறைமையியல் உறுதியானதாக இருந்தபோதிலும், தந்தை வழிச் சமூகங்களின் அமைப்பின் அடிப்படையிலேயே அது அவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளதெனக் கருதுகிறோம். அவ்வாறு நாம் கருதுவது மிகவும் பொருத்தமானதாகவும் ஆக்கபூர்வமானதாகவும் சமகால முஸ்லிம் குடும்பங்களுக்கும், சமூகங்களுக்கும் ஏற்புடையதாகவும் இருக்கும் எனக் கருதுகிறோம். இந்த வழக்குக்கு மாறாகப் புதிதாகத் தரப்படும் விளக்கம் குறிப்பாக, சட்ட நிபுணர்கள் புதிய சான்றுகளினதும் மாற்றமடையும் சூழ்நிலைகளினதும் ஒளியில் வாசகங்களில் காணப்படும் சொற்களுக்கும் விளக்கங்களுக்கும் வித்தியாசமான கருத்துக்களை இலகுவாக விருத்தி செய்கின்ற காரணத்தினால் ஆதாரபூர்வமான முறைமையியலினால் உறுதிப்படுத்தப்படுகின்றது.

## A. "ழரப" என்பதன் மொழியியல் பகுப்பாய்வு

1. புராதன இலக்கிய அரபியில் "ழரப" வுக்கு 25 வித்தியாசமான பொருள்கள் உள்ளன. "அடியுங்கள்" அல்லது "சரீர தண்டனை" என்பனவும் அவற்றுள் அடங்குகின்றன. ஆனால், மற்றொரு கருத்து "அதிலிருந்து விலகிச்செல்லுங்கள்" என்பதாகும். ஆகவே, அந்த வாசகம் இவ்வாறு கொள்ளப்படலாம்:

   *"எவர்கள் (தம் கணவருக்கு) மாறு செய்வார்கள் என்று நீங்கள் அஞ்சுகின்றீர்களோ அந்தப் பெண்களுக்கு நல்லறிவு புகட்டுங்கள். பின்னர் படுக்கைகளிலிருந்தும் ஒதுக்கி வையுங்கள். அதன் பின்னர் அவர்களிலிருந்து விலகிச் சென்றுவிடுங்கள்.*

உண்மையில் லாலேபக்தியார் அவருடைய "மேன்மையான குர்ஆனில்" (The Sublime Quran) 4:34 என்ற வசனத்தை மொழி பெயர்க்கின்றார். அது வருமாறு:

> *"எவர்களுடைய எதிர்ப்புக்கு நீங்கள் அஞ்சுகின்றீர்களோ அவர்களுக்கு நல்லறிவு புகட்டுங்கள். பின்னர் படுக்கையிலிருந்து விலக்கி வையுங்கள். அதன் பின்னர் அவர்களிலிருந்து விலகிச் சென்றுவிடுங்கள்."*

## B. நுஷூஸ் பற்றிய மயக்கம்

1. எப்படியாயினும் 'ழரப' என்பது வரையறுக்கப்பட்டிருந்த போதிலும், அதனைப் பிரயோகிப்பதற்கு குர்ஆன் தெளிவாக 'நுஷூஸ்' - இன் பயம்' என்று ஒரு நிபந்தனையை விதிக்கிறது. வேறு வார்த்தைகளில் அவை பல மொழிபெயர்ப்புக்களிலும் விளக்கங்களிலும் "கீழ்ப்படியாமை", "அமைதியின்மை", "நேர்மையின்மை" என்று தரப்பட்டுள்ளன. அந்த வசனத்தில் உள்ளவாறு நடவடிக்கை எடுப்பதற்கு இவற்றுள் ஒன்று நிபந்தனையாக நடைபெற்றிருக்க வேண்டும்.
2. மொழியியல் ரீதியாக நுஷூஸ் என்றால் உட்கார்ந்திருக்கும் அல்லது படுத்திருக்கும் நிலையில், அக்குறிப்பிட்ட இடத்திலிருந்து செல்லும் எண்ணத்தோடு "எழுந்திருத்தல்" என்றுதான் குர்ஆனில் ஏனைய இடங்களில் அடிக்கடி பாவிக்கப்பட்டுள்ளது. (உதாரணமாக (58:11 மற்றும் 2:259) ஆகவே, 4:34 இன் சந்தர்ப்பத்திலும் நுஷூஸ் என்பது திருமணத்தை விட்டுச் செல்ல எழுந்திருத்தல் என்று பொருள்படவேண்டும். தற்கால வழக்கில் ஒரு "நாஷிஸ் மனைவி" என்பது திருமணம் முடித்த பெண் வீட்டை விட்டுச் சென்று வேறு எங்கோ வாழ்கிறாள். ஆனால் அவள் இன்னும் விவாகரத்துச் செய்யவில்லை என்று பொருள்படும்.
3. "நுஷூஸ்" கணவனோடு சம்பந்தப்பட்டதாகவும் இருக்கலாம். எவ்வாறெனில் மனைவி அதைத் தன் கணவனிடமிருந்து பயந்தால் அத்தகைய சந்தர்ப்பத்தில் பரிகாரம் காண்பதற்காகவும் இதே நடவடிக்கையை எடுக்கலாம். (4:128) இருந்தபோதிலும் சுவையான அம்சம் என்னவென்றால், 'நுஷூஸ்' என்பது கணவன் விடயத்தைப் பொறுத்தவரையில் 'கீழ்ப்படியாமை' என்று ஒருபோதும் விளங்கப்பட்டதில்லை. அதற்குப் பதிலாக ஒரு ஆணுக்கு எதிராகப் பெண்ணால் பாவிக்கப்படும்போது விளக்கம் அடிக்கடி மாறுகிறது. இந்த முரண்பாட்டுக்குக் காரணம் மொழிபெயர்ப்பாளரின் கலாசார நியமங்கள் அவரது மொழிபெயர்ப்பைப் பெரிதும் பாதித்துள்ளமையாகும். 'நுஷூஸ்' - கீழ்ப்படியாமை என்று விளங்கிக்கொள்ளுதல் உண்மையான சொல்லின் பொருளின் வீச்சைவிட மத்தியகால மனங்களில் பதிந்திருந்த பால்நிலை தொடர்பான பங்கைப் பிரதிபலிப்பதாகக் கருதப்படலாம். அவ்வாறு பிற்காலச் சட்டவல்லுநர்கள் ஒரு மனைவி கீழ்ப்படியாதிருப்பதையோ

கணவனைவிட்டுச் செல்வதையோ ஏற்றுக்கொள்ளத்தக்கதாகக் கருத்திலெடுக்காது விட்டிருந்தாலும் மனைவிமார் அவ்வாறு நடந்து கொண்ட சந்தர்ப்பங்கள் ஆரம்பகால ஹதீஸ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. அவ்வாறே கணவன்மார் தம் மனைவிமாருக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று இந்த சட்ட அறிஞர்களுக்கு சிந்திக்க முடியாமற் போயுள்ளது.

## C. பாடப்பொருள்களுக்கு இடையிலான பகுப்பாய்வு

1. குர்ஆனுக்கு விளக்கம் கொடுப்பதற்கு மிக உகந்தமுறை குர்ஆனுடைய ஏனைய பகுதிகளைக்கொண்டு குர்ஆனுக்கு விளக்கம் கொடுக்கும் “தப்ஸீர் அல் குர்ஆன் பில் குர்ஆன்” என்னும் முறை என்பது பண்டைய மற்றும் நவீன அறிஞர்கள் ஆகிய இருசாராராலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இதை குர்ஆனைக்கொண்டு குர்ஆனை விளங்குதல் என்று வழங்குகின்றனர். இங்கு என்ன முக்கியம் என்றால், குர்ஆனின் வேறு எந்தப் பகுதியும் 4:34 இன் ‘அடித்தல்’ என்ற மொழிபெயர்ப்பை ஆதரிக்கவில்லை என்பதுமட்டுமல்ல ‘விலக்கிவைத்தல்’ அல்லது ‘விலகிச் செல்லல்’ ஆகிய மொழி பெயர்ப்புக்களை ஆதரிக்கின்ற ஏனைய பகுதிகள் காணப்படுகின்றன. உ-ம் 2:226-227. மனைவியிடமிருந்து விலகிக்கொள்ளல் (ஈலா/ அய்லா) இணக்கத்தை ஏற்படுத்துதல் அல்லது விவாகரத்துச் செய்தலுக்குப் பீடிகையாக உள்ளது. இது கணவனுக்கு அவர் தொடர்ந்தும் மணவாழ்வில் சேர்ந்து வாழ விரும்புகின்றாரா அல்லது விவாகரத்துச் செய்வதைத் தெரிவு செய்கின்றாரா என்று தனிப்பட்ட ரீதியாக முடிவு செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. இந்த ‘விலகியிருக்கும்’, ‘பிரிந்திருக்கும்’, காலமும் வரையறையின்றி நீடிக்க முடியாது. அதன் மிகக்கூடிய காலம் நான்கு மாதங்கள் என வரையறுக்கப்பட்டுள்ளதோடு, அதற்குள் கணவன் தனது உள்ளத்தில் ஒரு முடிவை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். பலதார மணங்களின்போது மற்றவர்களை விடுத்து ஒரு மனைவிக்கு மட்டும் எதிராக ‘அய்லா’ செய்யப்படுவதில்லை. ஆனால், அது சமகாலத்தில் எல்லா மனைவிமார்களுக்கும் எதிராகச் செய்யப்படும்.

2. 4:34 வாசகத்திலுள்ள ''ழரப'' வை அடித்தல் என மொழிபெயர்த்தல் விவாகரத்துப் பற்றிய ஏனைய வசனங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் முரண்பாட்டைக் காட்டுகிறது. திருமணத்தின்போதும் அதை முடிவுக்குக் கொண்டு வருவதிலும் வற்புறுத்தலுக்கு இடமில்லை. உதாரணமாக, ஸூரா 2 வசனம் 231 இவ்வாறு கூறுகிறது:

*“இன்னும் மனைவிகளை நீங்கள் மீட்கக்கூடிய தலாக் கூறி அவர்கள் தங்கள் இத்தாவின் தவணையை அடைந்துவிட்டால் அவர்களை முறைப்படி தடுத்துவைத்துக் கொள்ளுங்கள். அல்லது (இத்தாவின் தவணையை முடித்துக் கொண்டு) நன்முறையில் விட்டுவிடுங்கள். ஆனால், நீங்கள் வரம்புமீறி இடையூறு செய்வதற்காக அவர்களைத் தடுத்து வைத்துக்கொள்ளாதீர்கள். இவ்விதம் எவரேனும் செய்தால் திட்டமாக அவர் தமக்குத் தாமே அநீதி இழைத்துக்கொண்டார்.”*

வேறு வார்த்தையில் கூறுவதானால், கணவன்மார் தாம் விரும்பினால் தமது மனைவிமார்களை விவாகரத்துச் செய்யும்படி தூண்டப்படுகின்றார்கள். ஆனால் அவர்களுக்கு வரம்பு மீறி இடைஞ்சல் செய்வதை அனுமதிக்கவில்லை. கணவன்மாருக்கு திருமணம் முடித்த அவர்களது மனைவியர்களை அடிக்கக் குர்ஆன் கூறியிருக்குமாக இருந்தால் அது திருமணம் முடிப்பதைவிட விவாகரத்துச் செய்யக் கூடுதலாகத் தூண்டுவதாக அமைகின்றது. இது குர்ஆன் மிகத்தெளிவாக விவாகரத்தைவிடத் திருமணத்துக்கு வழங்கும் முக்கியத்துவத்தோடு முரண்படுகின்றது. 4:34 இன் மொழிபெயர்ப்பு ‘விட்டுவிலகிச் செல்லுங்கள்’ என மொழிபெயர்க்கப்பட்டிருந்தால் இத்தகைய முரண்பாடுகள் எழுந்திருக்காது.

3. “ழரப” என்பதற்குப் பதிலாக அடித்தல் அல்லது சரீர தண்டனை எனப் பொருள் தரும் வேறு மூன்று சொற்களைக் குர்ஆன் கையாள்கின்றது. அவை 28:15, 38:41, 51:29 என்பனவாகும். மேலும், “ழரப” என்பதன் மூலச் சொல் குறைந்தது பதினேழு முற்றிலும் வேறுபட்ட உள் அர்த்தங்களைக் குறிப்பிடுகின்றன. அதாவது தடுத்து வைத்துக்கொள்ளுங்கள் (43:57), ஊடாகப் பயணியுங்கள் (4:101), மூடுங்கள் (3:112) என்பன அவற்றுட் சில. பெரும்பாலும் இந்த அடிப்படைச் சொல்லானது ஒரு மறைபொருளைத் தருகின்றது. ‘தள்ளிச்செல்லல்’, ‘பிரிந்திருக்கச் செய்தல்’, ‘அதிலிருந்து தூரமாதல்’ அல்லது ஒரு தடையை உருவாக்குதல். (வீட்டிற்குள்ளேயும்)

மணவாழ்வில் முரண்பாடு என்று கருதினால் அங்கு கணவன் என்ற அடிப்படையில் விவாகரத்துச் செய்ய முன்னர் தனது மனைவியிலிருந்து பிரிந்திருத்தல் என்பதுதான் மிக விரும்பத்தக்க பொருளாகும். இதுவே திருத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் தனது மனைவிமார்களுடன் நடந்துகொண்ட உறுதியான இசைவான வழிமுறையாகும். (கீழே பார்க்க)

## D. குர்ஆன் விடுக்கும் பொதுச் செய்தி

1. குர்ஆன் விடுக்கும் பரவலான செய்தி என்னவெனில், கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் அன்பையும் அமைதியையும் அதிகரிக்கச் செய்வதாகும். மேலும், குர்ஆன் திருமணத்தை அன்பையும் கருணையையும் ஏற்படுத்தும் ஒரு புனிதமான உடன்படிக்கை என்று எடுத்துக்காட்டுகிறது. ஸூரா முப்பது வசனம் இருபத்தொன்று (30:21) வருமாறு:

   *"(நீங்கள் சேர்ந்து வாழக்கூடிய உங்கள்) மனைவிமாரை நீங்கள் அவர்களிடம் மனநிம்மதி பெறுவதற்காக உங்களிலிருந்தே உங்களுக்காக அவன் படைத்து உங்களுக்கிடையில் அன்பையும் கிருபையையும் ஆக்கியிருப்பதும் அவனது அத்தாட்சிகளில் உள்ளதாகும். சிந்தித்து உணரக்கூடிய சமூகத்தாருக்கு இதில் நிச்சயமாக(ப் பல) அத்தாட்சிகள் இருக்கின்றன."*

4:34 "ழரப" வை அடித்தல் என மொழி பெயர்ப்பது, வீட்டில் மனநிம்மதி, அன்பு, கிருபை என்று இங்கு விடுக்கப்பட்டுள்ள செய்தியோடு முரண்படுவதாகக் காணப்படுகின்றது.

2. ஆரம்பகால முஸ்லிம்கள் முக்கியமாக அலி இப்னு அபீதாலிப், உமர் இப்னு அல்-கத்தாப் ஆகியோர் குர்ஆனை விளக்குவதற்குப் புனிதமான முறைவழியைப் பயன்படுத்தினார்கள். அவர்கள் ஒரு தனி வசனத்தை மட்டும் எடுத்து வாசித்து அது முழுப் பிரச்சினையையும் தழுவியதாக உள்ளது எனக் கருதவில்லை. பதிலாக, அவர்கள் முழுக் குர்ஆன் உட்பட இயலுமான எல்லாக் காரணிகளையும்- திருத்தூதர் (ஸல்) அவர்களின் வழிமுறை, ஏனைய காரணங்கள், பொது அறிவு மற்றும் குறிப்பிட்ட சமூகத்தின் எல்லா நன்மைகள் முதலிய தேவைகளையும் - ஆராய்ந்து பார்த்தார்கள்.

## E. திருத்தூதரின் முன்னுதாரணங்கள்

1. “ழரப” வை அடித்தல் என மொழிபெயர்ப்பது திருத்தூதர் (ஸல்) அவர்கள் குர்ஆனை எவ்வாறு விளங்கிக் கொண்டார்கள் என்பதைப் பிரதிபலிக்கும் சுன்னாவுடன் முரண்படுகின்றது. திருத்தூதர் (ஸல்) அவர்கள் தம் மனைவிமார்களில் எவரையும் அடித்ததாக எந்த ஒரு குறிப்பும் காணப்படவில்லை. ஆனால், அதற்குப் பதிலாக நபித்தோழர் அனஸ் இப்னு மாலிக் கூறுகின்றார்கள், திருத்தூதர் முஹம்மதைவிடத் தன்னுடைய குடும்பத்தினர் மீது அதிகமாக அன்பு கொண்டிருந்த வேறொருவரை நான் ஒருபோதும் கண்டதில்லை. (ஸஹீஹ் முஸ்லிம்)
2. “*அல்லாஹ்வின் அடிமைப்பெண்களை ஒருபோதும் அடிக்காதீர்கள்*” என அவர்கள் கட்டளையிட்டார்கள். (ஸுனன் இப்னு தாவூத்). அத்துடன், தங்களது மனைவிமார்களை அன்பாக நடத்துபவர்களைப் புகழ்ந்தார்கள். “பூரணமாக விசுவாசங்கொண்டவர்கள் யார் என்றால் அவர்கள் தான் சிறந்த நற்குணமுள்ளவர்கள் என்றார்கள். உங்களில் மிகச்சிறந்தவர் உங்களின் மனைவி மீது மிகுந்த அன்பு கொண்டவர்களாவர்.” (ஸுனன் திர்மிதி). அவர்கள் வீட்டில் பரஸ்பர மரியாதையையும் அமைதியையும் ஊக்குவித்தார்கள். ஒரு விசுவாசி தன் மனைவி மீது வெறுப்புக் கொள்ளக்கூடாது. அவளிடம் ஏதேனும் ஒன்றை விரும்பவில்லையானால் நிச்சயமாக அவன் திருப்தியடையக்கூடிய வேறு ஏதேனுமொரு குணம் அவளிடம் இருக்கும். (ஸஹீஹ் முஸ்லிம்). இக்குறிப்புக்கள் அக்காலத்தில் நிலவிய நெறிமுறைகளுக்கு எதிராக இருந்ததுடன், திருத்துதரின் நெருங்கிய தோழர்கள் சிலர் நபியவர்கள் இந்நிலைமையைக் கடைப்பிடிப்பதற்கு அவர்களுடைய மிகவும் மிருதுவான இதயமே காரணம் என்றுகூட நினைத்தார்கள். எனினும் அவர்கள் அவர்களின் செயல்களில் ஒருபோதும் தடுமாற்றம் அடையவில்லை.
3. திருத்தூதர் தனது மனைவிமார்களுடன் பிரச்சினைகளை எதிர்கொண்ட போது, (விசேடமாக அவர்கள் நெருக்கடிக்குள்ளாகி இருந்த வேளையில், குறிப்பாக மேலுமுயர்ந்த வாழ்க்கைத்தரத்தைக் கேட்டபோது) அதை அவர்களால் தாங்கிக்கொள்ள

முடியாதபோது அவர்கள் மணம் முடித்த வீட்டை விட்டுச்சென்று, அவர்களிலிருந்து விலகியிருந்திருக்கிறார்கள். இச்சந்தர்ப்பத்தில் 4:34 சரீர தண்டனையைத்தான் வழங்க வேண்டுமென்று அவர்கள் விளங்கியிருந்திருப்பார்களேயானால் நிச்சயமாக அவர்கள் அவ்வாறு செய்திருப்பார்கள். ஆனால், அவர்களது செயலின் மூலம் திருத்தூதர் (ஸல்) அவர்கள் 4:34 ஐ விட்டு விலகிச் செல்லல் என்று தான் விளக்கினார்களேயொழிய "அடியுங்கள்" என்றல்ல.

## F. மகாஸித் அல்-ஷரீஆ

1. இஸ்லாமிய சட்டத்தைப் பாதுகாப்பதற்காக ஷரீஆ சட்டங்கள் இருக்கின்றன. ஷரீஆ சட்டங்களின் முக்கிய நோக்கங்கள் (மகரித்) சமூகத்தில் சமய (தீன்), வாழ்க்கை (நகப்ஸ்), மனம் (அக்ல்), குடும்பம் (நஸ்ல்), கௌரவம் (இர்த்), செல்வம் (மால்) ஆகியவற்றைப் பாதுகாப்பதும் உயர்த்துவதுமேயாகும். ஒருவருடைய கணவனை/மனைவியை புண்படுத்துவது மேலே குறிப்பிட்ட ஷரீஆ சட்டங்கள் மூலம் பாதுகாக்கப்படவேண்டிய அடிப்படைக் கொள்கைகளில் குறைந்தது - வாழ்க்கை, கௌரவம், குடும்பம் - ஆகிய மூன்றையும் மீறுவதாக அமைகின்றது.

   அல்லாஹ் மனித சமுதாயத்தின் மீது வழங்கியுள்ள கௌரவத்திற்கு அமைவாக ஷரீஆ சட்டங்கள் மனித வாழ்வின் புனிதத்துவத்தைப் பாதுகாக்கின்றன; ஆதரிக்கின்றன. அத்தோடு, சகலவிதமான உடல் நோவினைகளில் இருந்தும் பாதுகாப்பு வழங்குகின்றன. மேலும் இந்தக் கௌரவத்தின் நோக்கம் அல்லாஹ்வால் வழங்கப்பட்ட கௌரவத்தைப் பராமரித்துப் பாதுகாப்பதாகும். அது அவதூறு கூறப்படுவதற்கு எதிராகப் பாதுகாப்பு வழங்குகிறது. இரகசியம் மீறப்படுவதிலிருந்தும் அன்றாட பயம் மற்றும் மரியாதை செய்யப்படாமைக்கு எதிராகவும் பாதுகாப்பு வழங்குகின்றது. அத்தோடு அடிப்படை மனித உரிமைகளை ஊக்குவிக்கிறது. மூன்றாவதாக, வீட்டு-வன்முறையானது வீட்டில் வாழும் அங்கத்தவர்கள் அனைவருக்கும் பாதுகாப்பான புகலிடத்தை வழங்கும் குடும்பத்தின் நோக்கத்தை மீறுகின்றது.

## G. வரலாற்று நோக்கு: படிப்படியாக நீக்கும் குர்ஆன் அணுகுமுறை

1. இஸ்லாத்துக்கு முற்பட்ட அரேபியாவில் மனைவி ஒரு சொத்தாகக் கருதப்பட்டதோடு, அவளது கணவன் விரும்பியவாறு அவளை நடத்த முடியுமாகவுமிருந்தது. ஆனால் அது அக்கால வழக்குக்கு மாற்றமானதாகக் கருதப்படவில்லை. 19 ஆம் நூற்றாண்டிலும் கூட ஐரோப்பிய சட்டம் ஒரு மனிதனுக்கு அவனது மனைவியை அவளது உயிருக்கு ஆபத்து ஏற்படாதவாறு அடிக்க அனுமதித்தது. இன்றும்கூட மனைவியை இவ்வாறு துஷ்பிரயோகம் செய்வது ஒழிக்கப்படவில்லை. உதாரணமாக, ஐக்கிய அமெரிக்காவில் தினமும் சராசரி மூன்று பெண்கள் தமது கணவன்மார்களால் அல்லது வாழ்க்கைத் துணைவனால் கொலை செய்யப்படுகிறார்கள். 7 ஆம் நூற்றாண்டில் திருத்தூதர் (ஸல்) அவர்கள், தன்னைப் பின்பற்றியவர்களுக்குத் தமது மனைவிகளை அடிக்க வேண்டாம் என்று கூறியபோது அது ஒரு பலவீனமான கருத்தாகக் கொள்ளப்பட்டது. கௌரவத்தைப் பாதுகாக்கும் ஒரு கௌரவமான நிலை எனக் கருதப்படவில்லை.

2. கணவன், மனைவி துஷ்பிரயோகத்தைப்பற்றிப் பேசும்போது குர்ஆன் மக்களுக்குப் பழக்கமான அணுகுமுறையை நாடுகின்றது. அதாவது, படிப்படியாக நீக்கும் முறையைப் பிரயோகிக்கும் ஓர் எண்ணக்கருவை முன்வைக்கிறது. பாதுகாப்புக்களுக்கும், வரையறைகளுக்கும் ஊடாக நடைமுறையிலிருக்கும் நியதிகளைத் தழுவிக்கொள்கிறது.

   7 ஆம் நூற்றாண்டளவில் ஆண்களுக்குத் தமது மனைவியரைத் துஷ்பிரயோகம் செய்ய அனுமதி தேவைப்படவில்லை. ஆகவே, குர்ஆன் 4:34 வசனத்தின் மூலம் துஷ்பிரயோகம் செய்ய அனுமதிக்கும் வேலையைச் செய்யவில்லை. ஆனால் அதற்குப் பதிலாக அதைக் கட்டுப்படுத்தியது. அதனால் 4:34 ஐ வைத்துக்கொண்டு குர்ஆன் மனைவியை அடிக்கும் பழக்கம் தொடர்ந்திருக்க அனுமதியளிக்கக் கருதியது என்று நாம் நினைப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை.

3. ஆரம்பகால சட்டவல்லுநர்கள் இந்த வசனத்தைப் பிரயோகிப்பதைக் கட்டுப்படுத்தினர். அடையாளமாக அல்லது தேவைக்கு மட்டும் அனுமதிக்கப்படக்கூடிய 'அடித்தல்' எனப் பெரும்பாலும் கருதப்பட்டது. வேறு சிலர் மிஸ்வாக் குச்சியினால்

அல்லது மடித்த கைக்குட்டையினால் அடிக்கலாம் என்று கருதினர். இப்னு ருஷ்த் பின்வரும் விடயத்தை உதாரணமாகக் கூறினார்: ஒருவன் தனது மனைவியைப் படுக்கையில் வேறொருவனுடன் இருக்கும்போது பிடித்துவிட்டால் அவளை மன்னித்துவிடலாம் அல்லது விவாகரத்துச் செய்துவிடலாம் என்று வலியுறுத்தினார்கள். ஆனால் அதற்கு மேலாக ஒன்றுமில்லை. இந்தச் சட்டவல்லுநர்களால் அவர்களது காலத்திலும் இடத்திலும் ஆக்கப்பட்ட இவ்விடயங்கள் கணவன், மனைவிக்கு இடையிலான வன்முறையின் அளவை இந்த அளவுக்குக் கட்டுப்படுத்தியமை விதந்து குறிப்பிடத்தக்கதாகும். இக்கட்டுப்பாடுகள் அவர்களது காலத்தைப் பொறுத்தவரையில் பெரும் முன்னேற்றமானதாக இருந்தன.

# அத்தியாயம் - III

## வன்முறைத் தீவிரவாதமும் அதனை மறுதலித்தலும்

ஜிஹாத் என்ற பதம் (முஸ்லிம் தீவிரவாதிகளால்) சமூகத்தோடு தொடர்புடைய வன்முறையில் ஈடுபடுவதைச் சமய ரீதியில் நியாயப்படுத்தப் பாவிக்கப்படுகின்றது. "ஜஹத" எனும் மூலத்திலிருந்து திரிபடைந்து பெருமளவில் பலத்தைச் செலவழித்தல் என்ற கருத்தைத் தரும் 'ஜிஹாத்', பல வித்தியாசமான, முரண்பாடான கருத்துக்களைக் கொண்டிருந்தபோதிலும், பொதுவாக 'அல்லாஹ்வின் பாதையில் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றுக்கொள்வதற்கான போராட்டம் என்பதைக் குறிக்கின்றது. இச்சொல் சில சமயங்களில் 'புனித யுத்தம்' என மொழி பெயர்க்கப்பட்டாலும், 'ஜிஹாத்' என்பது யுத்த நடவடிக்கைகளைக் குறிக்காது. ஏனெனில், யுத்த நடவடிக்கைகளைக் குறிக்க அரபியில் பயன்படுத்தப்படும் சொல் 'ஹர்ப்' என்பதாகும். 'கிதால்' என்பது ஆயுதம் தாங்கிய யுத்தத்தைக் குறிப்பிடுகின்றது. யுத்த நடவடிக்கைகளும் ஆயுதம் தாங்கிய யுத்தங்களும் இஸ்லாத்தில் புனிதமானவைகள் அல்ல. அவை வெறுமனே நியாயப்படுத்தப்படுகின்றன அல்லது நியாயப்படுத்தப்படாதிருக்கின்றன.

எனினும், தீவிரவாதிகள் 'ஜிஹாத்' என்ற மொழியையும், அச்சொல்லால் குர்ஆனில் கூறப்பட்டுள்ளவற்றையும் வன்முறையை நியாயப்படுத்துவதற்காக வருவித்துக் கொண்டுள்ளனர். ஆகையினால், இஸ்லாத்தின் பெயரால் நடத்தப்படும் வன்முறைக்கு எதிரான எந்தச் சவாலும் இந்தக் குறிப்பிட்ட பகுதிகளை நன்கு ஆராய்ந்து அவற்றின் கருத்துக்களைத் தெளிவாக்கிக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யும்போது பல்வேறு காரணிகள் கருத்திற்கொள்ளப்படவேண்டும்.

அவையாவன:

1. குர்ஆன் வசனங்களின் புனிதமான பகுப்பாய்வு.
2. சம்பந்தப்பட்ட வசனங்களின் இலக்கியச் சூழமைவு.
3. திருத்தூதரின் உதாரணங்கள்.
4. வசனங்களின் விளக்கத்தின் வரலாற்று சந்தர்ப்பம்.
5. இராணுவ ஜிஹாத் பற்றிய சட்டவறிஞர்களின் வரையறைகள்.

6. பழாயில் அல்ஸப்ர் பொறுமையின் சிறப்புகள் பற்றிய கொள்கைகள்
7. ஜிஹாத் பற்றிய சமகால விளக்கங்கள்.
8. (மகாஸித் அல்-ஷரீஆ)

இவ்வாறாகப் பரந்தளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விளக்கமளிக்கும் நுட்பங்களையும் சட்ட இலக்கிய மரபுகளையும் கலந்துரையாடல்களையும் எமது சமகால வாய்ப்புக்களையும் பயன்படுத்தி இஸ்லாத்தின் பெயரால் வன்முறைத் தீவிரவாதத்தைக் கையாள முடியாது என்பதை நாம் எடுத்துக்காட்டுகிறோம். குர்ஆனும் இஸ்லாமும் தற்காப்பு நடவடிக்கைகளை மட்டுமே அனுமதிக்கின்றன.

## A. குர்ஆன் வசனங்களின் புனிதமான பகுப்பாய்வு

குர்ஆனின் பல்வேறு அத்தியாயங்களையும் தனித்தனியாக வாசிக்கும்போது யுத்த நடவடிக்கைகள் வெவ்வேறு விதமாக அமைந்து காணப்படுகின்றன. எப்படியிருப்பினும், குர்ஆனை முழுமையாகவும் வசனங்கள் அருளப்பட்ட வரலாற்று சந்தர்ப்பங்களையும் வைத்து வாசிக்கும்போது நாம் எந்த முரண்பாடுமற்ற ஒரு சீரான போக்கைக் காண்கிறோம்.

### i. மக்காவின் ஜிஹாத்

1. திருத்தூதரும் அவரது தோழர்களும் மக்காவில் இருந்த பன்னிரண்டு ஆண்டுகளிலும் இறக்கப்பட்ட திருக்குர்ஆன் வசனங்கள் அவர்களுக்குத் தீங்குகள் இழைக்கப்படும்போது அவற்றுக்கெதிரான தற்காப்பு உரிமையை வழங்கின. என்றாலும், இந்த வசனங்கள் வன்மையாக நடக்க அனுமதிக்கவில்லை.

   பதிலாகப் பொறுமையைக் கடைப்பிடித்து தவறு செய்பவர்களை மன்னிக்குமாறு உத்தரவிட்டது. உதாரணமாக, ஸூரா 16, வாசகம் 125 இவ்வாறு கூறுகிறது:

   > *“நீர் (மனிதர்களை) விவேகத்தைக்கொண்டு மற்றும் அழகான நல்லுபதேசத்தைக்கொண்டு உமதிரட்சகனின் வழியின் பக்கம் அழைப்பீராக! அன்றியும் எது மிக அழகானதோ, அதைக்கொண்டு அவர்களுடன் நீர் விவாதம் செய்வீராக! நிச்சயமாக உமதிரட்சகன் அவனுடைய வழியிலிருந்து தவறியவரை மிக்க அறிந்தவன; இன்னும் நேர்வழி பெற்றவர்களையும் அவன் மிக்க அறிந்தவன்.”*

2. மக்கா காலத்து ஜிஹாத் மதீனா காலத்தை விட நீண்டதாக இருந்ததோடு, அடிக்கடி நடந்த துன்புறுத்தலுக்கு எதிராக வன்முறை தவிர்ந்த எதிர்ப்பைத் தெரிவிக்க இடமளித்தது. இது,

அ) முதலில் இரகசியமாகவும் அதைத்தொடர்ந்து பகிரங்கமாகவும் பிரசாரம் செய்யும்போதும்.

ஆ) இஸ்லாத்தைத் தழுவிய அடிமைகளைச் சுதந்திரமாக விடுவிக்கவும்,

இ) அபிஸீனியாவுக்கும் பின்னர் மதீனாவுக்கும் சென்று புகலிடம் பெறவுமாக ஒரு வடிவத்தைத் தோற்றுவித்தது.

இங்கு திருத்தூதர், ஆரம்பகால முஸ்லிம்களை மேற்குப் புறமாக கிறிஸ்தவ அபீஸீனியப் பேரரசுக்கு (தற்போது எதியோப்பியா) செல்லும்படியும் அங்கு பாதுகாப்புக் கிடைக்கும் என்றும் கூறி அனுப்பி வைத்தமை முக்கியமாகக் கவனிக்கத்தக்கது. அவர்களை அங்கு யுத்த செய்தியுடனோ அல்லது வெற்றிகொள்ளும் செய்தியுடனோ அனுப்பவில்லை.

## ii. தற்பாதுகாப்புக்காக எதிர்த்துப் பலத்தைப் பிரயோகிப்பதற்கான அனுமதி

1. குர்ஆன் கட்டளைகள் திருத்தூதரும் தோழர்களும் மதீனாவுக்குச் சென்று குடியேறியதன் பிறகு முஸ்லிம்களின் குறிப்பிட்ட வரலாற்று, அரசியல் நிலைமைகளுக்கு ஏற்ப அடிக்கடி பிரதிபலித்துக் கொண்டிருந்தன. தூதர் மதீனாவில் அரசியல் சகபாடிகளை ஒன்றிணைத்து ஓர் ஒன்றியத்தை நிறுவிக்கொண்டார்கள். இங்கு பல்வேறு சமயங்களைச் சேர்ந்தவர்களது முழு உரிமைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு, அவர்கள் அந்த சமுதாயத்தின் முழு உறுப்பினர்களாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டனர். மக்கா அரபிகள் முஸ்லிம்களையும் அவர்களது உடைமைகளையும் தொடர்ச்சியாகத் தாக்கி வந்தமையினால் தற்பாதுகாப்புக்காக அவர்களுக்கு எதிராகத் தமது பலத்தைப் பாவித்து அவர்களது சமயத்தைச் சுதந்திரமாக செயற்படுத்துவதற்கான உரிமையைப் பெற்றுக்கொள்ள மதினாவின் அரசியலமைப்புச் சட்டம் அனுமதியளித்தது.

2. யுத்தம் புரிவதற்கு இடமளிக்கும் முதலாவது வாசகங்கள் (22:39-40) ("கிதால்" சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் ஜிஹாதின் ஓர் அம்சம்) வருமாறு:

*"போர்" தொடுக்கப்பட்டோருக்கு அவர்கள் அநீதம் இழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தால் (எதிர்த்து) யுத்தம் செய்ய அனுமதியளிக்கப்பட்டுவிட்டது. நிச்சயமாக அல்லாஹ்வோ, அவர்களுக்கு உதவி செய்ய மிக்க ஆற்றலுடையவன். அவர்கள் எத்தகையோரென்றால் நியாயமின்றித் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். "எங்களுடைய இரட்சகன் அல்லாஹ் (ஒருவன்) தான்" என்று கூறியதைத் தவிர (வேறெதுவும் அவர்கள் வாக்காக இருக்கவில்லை.) மேலும் மனிதர்களில் சிலரை, சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுக்காதிருந்தால் மடங்களும் கிறிஸ்தவர்களின் வணக்கஸ்தலங்களும் யூதர் வணக்கஸ்தலங்களும் மஸ்ஜித்களும் - இவற்றில் அல்லாஹ்வின் பெயர் அதிகமாகக் கூறப்படும் (யாவும்) இடிக்கப்பட்டுப் போயிருக்கும்."*

இந்த வாசகங்கள் மூலம் அடக்குமுறையை எதிர்த்தல் என்பதற்குப் பதிலாக ஒரே கடவுளை வணங்கும் எல்லா நேர்மையான மக்களினதும் அடிப்படைச் சமய சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்காக (முஸ்லிம்களுக்காக மட்டுமன்றி) முஸ்லிம்கள் யுத்தத்தை மேற்கொள்ளலாம் எனத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளமை விசேடமாகக் கவனிக்கத்தக்கது.

## iii. மதீனாவின் ஜிஹாத்

1. திருத்தூதரையும் அவர்களது தோழர்களையும் கொன்றொழிக்க வேண்டுமென்று கங்கணங்கட்டி, வன்நெஞ்சத்தோடு ஓயாது செயற்பட்ட மக்கா வாசிகளுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் யுத்தம் தொடங்கிய பின்னர் பின்வரும் வாள்வாசகங்கள் இறங்கின. இஸ்லாம் ஒரு வன்முறைச் சமயம் என்று நிரூபிக்க முயலப்வர்களும் வன்முறையை நியாயப்படுத்த முயலும் முஸ்லிம்களும் இவ்விரு வாசகங்களையும் அடிக்கடி தனிமையாக எடுத்தும், இலக்கிய, வரலாற்று சந்தர்ப்பங்களுக்கு அப்பால் நோக்கியும் பாவித்துவருகின்றனர். எனினும், இவ்வசனங்களை முழுக் குர்ஆனினதும் புனிதமான

சந்தர்ப்பங்களை வைத்தும், அவை பேசும் கருத்தின் வரலாற்று சந்தர்ப்பத்தின் ஒளியில் அவை பேசும் விடயத்தைக் கொண்டும் அவற்றைக் கற்க வேண்டும்.

ஸுரா 9 வசனம் 5:

*"ஆகவே சிறப்புற்ற மாதங்கள் சென்றுவிட்டால் இணைவைத்திருப்போரை-அவர்களைக் கண்டவிடமெல்லாம் கொன்றுவிடுங்கள்; இன்னும் அவர்களைப் பிடியுங்கள்; அவர்களை முற்றுகையிடுங்கள்; ஒவ்வொரு பதுங்குமிடத்திலும் அவர்களைக் குறிவைத்து உட்காருங்கள்."*

ஸுரா 9 வசனம் 29:

*"வேதம் கொடுக்கப்பட்டவர்களில் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் விசுவாசங்கொள்ளாமலும், அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் விலக்கியவைகளை விலக்கிக்கொள்ளாமலும், இந்த உண்மை மார்க்கத்தை மார்க்கமாக ஏற்காமலும் இருக்கின்றனரே, அத்தகையோரை - அவர்கள் தங்கள் கையால் ஜிஸ்யா வரியை கொடுக்கும்வரை நீங்கள் அவர்களுடன் யுத்தம் புரியுங்கள்."*

2. இந்த வசனங்களை யுத்தத்தை ஆரம்பிப்பதிலிருந்து முஸ்லிம்களுக்குத் தடை விதிக்கும் வசனமான ஏற்கனவே மேற்கோள் காட்டிய பகுதிகளுடனும் எதிரிகள் சமாதானத்துக்கு வந்தால் முஸ்லிம்களும் சமாதானத்துக்குச் செல்ல வேண்டுமென்று முஸ்லிம்களைத் தூண்டும் பல வாசகங்களோடும் சேர்த்து வாசிக்க வேண்டும். அவ்வாறு படித்துப் பார்த்தால் அவை தற்காப்புக்கு மட்டுமே இடமளிக்கின்றன. குர்ஆன் வசனங்கள் எப்போதும் முழுமையாகவே எடுக்கப்பட வேண்டும். ஒரு வாசகத்தைப் புறக்கணித்து மற்றொன்றை நம்புவது அல்லாஹ்வின் வார்த்தையின் ஒரு பகுதியைப் புறக்கணிப்பதாகும். ஆகவே, சமயத்தைப் பின்பற்றுவதற்குத் தற்காப்பாக யுத்தம் அனுமதிக்கப்பட்டிருந்தாலும், 2:190 விசேடமாக முஸ்லிம்கள் பகைமையைத் தூண்டுவதைத் தடை செய்கிறது.

## B. 'வாள்' வசனங்களின் இலக்கியச் சூழமைவு

1. 9:5, 9:29 ஆகிய வசனங்களையும் 9:1-29 இன். முழுப்பகுதியினுடைய இலக்கியச் சூழமைவில் நின்று வாசித்துப் பார்க்கும் போது 1-4 ஆம் வசனங்கள் ஒரு குறிப்பிட்ட கூட்டத்தினரை நோக்கிப் பேசுகின்றன என்பதைக் காணலாம். அவர்கள்தாம் திருத்தூதர் காலத்து மக்கத்து

அரபிகளான பல தெய்வ வழிபாடு செய்பவர்கள். இந்தக் குழுவைச் சேர்ந்த ஒரு பிரிவினர் இளமைப் பருவத்திலுள்ள முஸ்லிம் சமுதாயத்தினருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை அடிக்கடி முறித்து வந்துள்ளனர். உண்மையில் அவர்கள் திருத்தூதரின் சகபாடிகளைத் தாக்கிக் கொலை செய்துள்ளனர் என்பதை வரலாற்று ஆதாரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அவ்வாறு முன்னெப்பொழுதும் சம்பவிக்காத நிலையில் ஒப்பந்தக் கடப்பாடுகளை முறித்துக்கொண்டவர்கள் விடயத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்று இந்த வாள் வாசகங்கள் முஸ்லிம்களுக்கு அறிவுறுத்துகின்றன. குர்ஆன் கூறுவது போன்று கோத்திரங்களின் வருடாந்த ஒன்றுகூடலான யாத்திரையின்போது ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படுதல் பற்றி அறிவிக்கப்படவிருந்தது. ஒப்பந்தத்தை முறித்தவர்களுக்கு நான்கு மாதகால பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது. இந்த நான்கு மாதங்கள் முடிந்ததும் யுத்தம் மீண்டும் தொடங்கப்பட வேண்டும். அவர்களோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தை முறிக்காதவர்களை இந்த நடவடிக்கை பாதிக்காது.

2. மக்காவாசிகளான அரபியர்களின் முஸ்லிம்களுக்கு எதிரான ஆக்கிரமிப்புகளையும் அவர்களது உடன்படிக்கை மீறல்களையும் வலியுறுத்துபவையே இத்தகைய வாள் வாசகங்கள் என்பதை ஆரம்பகால சட்டவல்லுநர்கள் விளங்கியிருந்தனர். அவர்களால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலுக்கு மேலதிகமாக இந்த இரு காரணிகளின் விளைவாகவே இக்குறிப்பிட்ட மக்களுக்கு எதிராகப் போர் தொடுப்பதற்கான உத்தரவு கிடைத்தது. 9:5 உம் 9:29 உம் ஒப்பந்தத்தை முறித்தவர்களைப் பற்றிய விசேட சம்பவத்தைக் குறிப்பிடுகையில் குர்ஆன் குறிப்பிடும் யுத்த நடவடிக்கைகளின் பொது விதிகளைப் பற்றி 2:190-195 வரை குறிப்பிடுகின்றன.

3. மொத்தத்தில் சுருங்கக்கூறின், பின்வரும் நிகழ்வுகளின் பின்னரே ஜிஹாதை அனுமதித்து இறை கட்டளை இறங்கியது.
   - மக்காவில் இஸ்லாத்தைப் பிரசாரம் செய்ய மக்காவின் தலைமைத்துவம் இடமளிக்காது தொடர்ந்தும் மறுத்தமை.
   - மக்காவில் தங்கியிருந்த முஸ்லிம்களைத் தொடர்ந்து கொடூரமாக இம்சித்து வந்தமை.

- ➢ இஸ்லாத்தை அழித்தொழிப்பதை ஒரே நோக்கமாகக் கொண்ட மக்காவாசிகள் மதீனா முஸ்லிம்களுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுத்து வந்தமை.
- ➢ திருத்தூதரைச் சார்ந்திருந்த பல கோத்திரங்கள் தன்னிச்சையாக முக்கியமான பாதுகாப்பு வாக்குறுதிகளை நிராகரித்து அவர்களை ஓர் இக்கட்டான நிலைக்குத் தள்ளிவிட்டமை.

## C. திருத்தூதரின் உதாரணம்

1. திருக்குர்ஆன் காட்டும் வாழ்க்கை முறையை வாழ்ந்து காட்டிய இறுதி நபியாக விளங்கிய திருத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் தற்காப்புக்காகவேயன்றி ஒருபோதும் எவருடனும் போர் தொடுத்ததில்லை. அத்தோடு, அவரது வாழ்நாளில் ஒருபோதும் இறைமறுப்பாளருக்கு எதிராக யுத்தம் புரியவில்லை.

2. திருத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் எப்போதும் அமைதியை, சாந்தியை வேண்டி நின்றார்கள். அவர்களது கூற்றொன்று ஸஹீஹ் முஸ்லிமில் பின்வருமாறு பதிவாகியுள்ளது. "அல்லாஹ் அமைதியானவன்; அமைதியை விரும்புகின்றவன். அமைதிக்கு அவனது வெகுமதி உண்டு. ஆனால் வன்முறைக்கு அத்தகைய எதுவும் இல்லை." மேலும் அவர்கள் கூறியுள்ளார்கள், "பொறுமையையும் அமைதியையும் இழந்தவர் உண்மையில் எல்லா நன்மைகளையும் இழந்தவராவார்." (ஸஹீஹ் முஸ்லிம்.)

## D. வசன விளக்கத்தின் வரலாற்றுச் சந்தர்ப்பம்

1. திருத்தூதரின் மறைவைத் தொடர்ந்து இளம் முஸ்லிம் சமுதாயம் புதிதாகத் தோன்றும் போலிச் சமயங்களிலிருந்து தன்னைப் பாதுகாக்கவேண்டியிருந்தது; மேலும் துன்புறுத்தல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது; அடிப்படைச் சமூக சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தவேண்டியிருந்தது; புதிய சட்டங்களை விருத்தி செய்யவேண்டிய தேவையும் ஏற்பட்டது. அக்காலத்தில் நிலவிய சர்வதேசச் சட்டம் வெற்றிகொள்ள வேண்டும் அல்லது வெற்றிகொள்ளப்படவேண்டும் என்பதாகும். நாடுகளும் சாம்ராச்சியங்களும் அவ்வாறுதான் செயற்பட்டன. முஸ்லிம்கள்

பொதுவாக, வெற்றிகொள்ளப்பட்ட மக்களை இஸ்லாத்துக்கு மத மாற்றம் செய்யவில்லை. அதற்குப் பதிலாக அவர்களது சமயத்தைச் செயற்படுத்துவதற்காகவும் இராணுவ நடவடிக்கைகளிலிருந்து அவர்களை விடுவிப்பதற்காகவும் ஒரு வரியைச் செலுத்த வேண்டும் என்று கூறினர்.

இஸ்லாமிய இராச்சியம் விரிவடைவதை நியாயப்படுத்தும் இந்த ஆரம்பகால முஸ்லிம்கள் இஸ்லாமிய ஆட்சி பரப்பப்படுவதற்கான ஜிஹாதை அனுமதித்தனர். இதை நிறைவு செய்வதற்காக பெரும்பாலான (எல்லோருமல்ல) ஆரம்பகால சட்டவல்லுநர்கள் இந்த வாள் வாசகங்கள் மேலோங்கி நிற்பதாகக்கூறி வன்முறையைத் தடைசெய்தல் அல்லது தற்பாதுகாப்புக்காக மட்டும் அங்கீகரித்தல் ஆகிய இரு நிலைகளையும் ஏற்கமுடியாது என உரிமை கோரினர் அல்லது நீக்கிவிட்டனர். ஆகவே, சட்டரீதியாக (நஸ்க்) நீக்குதல் குர்ஆனுக்கு விளக்கம் கொடுப்பதற்கு ஏற்ற ஒன்றாக வந்தது.

2. இவ்வாறு விரிவடைந்த ஜிஹாத் மேற்கொள்ளப்படுமாயின் ஏனைய எல்லா வகையான யுத்த நடவடிக்கைகளும் சட்டப்படி செல்லுபடியற்றதாக்கப்படுகின்றமையால் நடைபெறுகின்ற வன்முறை மீது கட்டுப்பாடாகவே அது அமைந்தது. இருந்தபோதிலும், அன்றைய 7 ஆம் நூற்றாண்டில் அண்டிய கிழக்கில் காத்திரமான, விரிவடைவதற்கான மூலோபாயம் ஒன்று இல்லாதிருந்திருந்தால் முஸ்லிம் சமுதாயம் நிலைத்திருந்திருக்காது எனக்கொண்டாலும், இன்றைய புவியரசியல் உலகிற்கு இனிமேலும் இக்கொள்கை ஏற்புடையதன்று.

## E. இராணுவ ஜிஹாதின் மீதான வரையறைகள்.

1. சட்டவல்லுநர்களால் இராணுவ ஜிஹாத் அனுமதிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் அவர்கள் விசேடமான விதிகளையும் வரையறைகளையும் விளக்கி முழுமையான சட்டக்கோவையை அமைத்தார்கள். உதாரணமாக, அத்தகைய யுத்தத்துக்கான அழைப்பு பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கலீபா அல்லது ஓர் இமாமிடமிருந்து வரவேண்டும். ஒரு தனிநபர் சட்டரீதியாக

யுத்தத்துக்காக அழைப்பு விடுக்க முடியாது. இன்று முழு உலக முஸ்லிம் சமுதாயத்துக்கும் (உம்மாஹ்) அத்தகைய ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முஸ்லிம் தலைவர் இல்லையென்ற காரணத்தினால் இத்தகைய தகுதித் தேவை இன்று மிகவும் பொருத்தமானதாகும்.

2. சட்டவல்லுநர்கள் யுத்த நடவடிக்கைகள் பற்றி மேலும் தெளிவான தடைகளை விருத்தி செய்தார்கள். அவ்வாறு நடத்தப்படும் ஜிஹாதின்போது ஏனையவற்றோடு பின்வருவனவற்றைச் செய்வதும் அனுமதிக்கப்படவில்லை. இருந்தபோதிலும், இன்று இஸ்லாத்தின் பெயரால் வன்முறைத் தீவிரவாதத்தில் ஈடுபடுகின்ற பலரிடம் தடை செய்யப்பட்ட செயல்களை அடையாளம் காணலாம்.

   - ➢ சகலவிதமான சிவிலியன்களையும் போர்வீரர்கள் அல்லாதவர்களையும் தாக்குதல்.
   - ➢ தன்னிச்சையாகச் சொத்துக்களை அழித்தல்.
   - ➢ தற்கொலை செய்தல்.
   - ➢ (பிரகடனப்படுத்தப்பட்ட முறையான யுத்தம் அல்லாது) மறைந்து இருந்தும் இரகசியமாகவும் பலத்தைப் பிரயோகித்தல்.
   - ➢ நம்பிக்கைத்துரோகம், ஏமாற்றுதல் போன்ற செயல்களில் ஈடுபடுதல்.
   - ➢ வல்லுறவில் ஈடுபடுதல்.
   - ➢ மக்களை மிரட்டிப் பயமுறுத்தல்.
   - ➢ மற்ற முஸ்லிம்களுக்கு எதிராக யுத்தம் புரிதல்.

## F. பொறுமையின் சிறப்பு (பழாஇல் அல்-ஸப்ர்)

1. முஸ்லிம் கல்விமான்கள் சிலர் ஜிஹாத் தொடர்பான இராணுவக் கொள்கைகளை விருத்தி செய்த அதேவேளை ஏனையோர் ஜிஹாதுக்குப் பதிலீடாக மாற்றுக் கருத்துக்களைப் பிரசாரம் செய்தனர். குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள ஜிஹாதை அதன் புனிதமான விளக்கத்தின் அடிப்படையில் பொறுமை காத்தலை விருத்தி செய்தனர். “ஆயுதப் போராட்டத்தின் சிறப்புகளைப்” (பழாஇல்

அல் - ஜிஹாத்) போற்றும் நூல்களிலிருந்தும் அதற்குப் போட்டியாக எழுதப்பட்ட பொறுமையின் சிறப்புகளைப் (பழாஇல் அல் - ஸப்ர்) போற்றும் நூல்களிலிருந்தும் இது பிரதிபலிக்கின்றது.

அமைதியான பொறுமை (ஸப்ர்) பற்றிய கொள்கை ஜிஹாதின் ஒரு பகுதியாக 12ஆம் நூற்றாண்டு சட்டவல்லுநரான அபூ ஹாமித் அல் கஸ்ஸாலியினால் பிரதான ஓட்டத்தினுள் கொண்டுவரப்பட்டது. அபூ ஹாமித் அல் கஸ்ஸாலி பொறுமையும் நன்றி பாராட்டுதலும் விசுவாசத்தின் இரு பகுதிகளாகும் என்று உறுதிப்படுத்தினார். அத்தோடு, 70 க்கு மேற்பட்ட குர்ஆன் வசனங்கள் அமைதியான பொறுமைபற்றிக் குறிப்பிடுகின்றன. அமைதியும் பொறுமையும் ஜிஹாதின் ஒரு பகுதியாகும் என்பதை அவர் விசேடமாக வலியுறுத்தினார்.

2. இதுதான் மக்கா காலத்தில் திருத்தூதருக்கும் அவரது தோழர்களுக்கும் துன்புறுத்தலுக்கு எதிராகக் கையாளும்படி குர்ஆன் கூறிய வன்முறை சாராத எதிர்த்துப் போராடும் முறையாகும். அது எப்போதும் இஸ்லாமிய தெய்வீகச் செய்தியின் ஒரு பகுதியாக இருந்ததோடு, இந்தக் கொள்கையைப் பல நூற்றாண்டு காலமாகப் பிரசித்திபெற்ற சட்டவல்லுநர்கள் பலரும் விரிவாக விளக்கியுள்ளனர்.

## G. ஜிஹாத் பற்றிய நவீன மற்றும் சமகால விளக்கங்கள்

1. 18 ஆம், 19 ஆம் நூற்றாண்டுகளில் முஸ்லிம்களின் நிலங்கள் குடியேற்ற நாட்டு ஆட்சியின் கீழ் இருந்தபோது, முஸ்லிம் கல்விமான்கள் மீண்டும் குர்ஆனுடைய விளக்கங்களையும் 'ஜிஹாத்' பற்றிய கொள்கைகளையும் நோக்கிச் செல்ல ஆரம்பித்தனர். இந்தவரிசையில் கெய்ரோ அல்அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் தலைவர் முஹம்மத் அப்துஹ் உட்பட பல கல்விமான்களும் இந்த சட்டப்படி நீக்குதல் கொள்கையை நிராகரித்தனர்.
2. எண்ணற்ற சமகால சட்டவல்லுநர்கள் குர்ஆனின் எந்த ஒரு வசனமும் முழுக் குர்ஆனும் கூறுகின்ற பெரும்பான்மையான கருத்தோடு தொடர்புறுத்தி விளங்கப்படவேண்டுமென்று வாதிடுகின்றனர். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஒரு விடயம் தொடர்பாகக் குர்ஆன் கூறும் எல்லா வசனங்களும் ஒன்றோடொன்று தொடர்புறுத்திக் கற்கப்படவேண்டும். இந்தக் கல்விமான்கள் வாள் வசனங்களின்

சந்தர்ப்பத்தோடு தொடர்புறுத்தி, திருத்தூதருக்கு இந்த அனுமதி ஒரு விசேட நிலைமையில் கொடுக்கப்பட்டது என்று முடிவு செய்கின்றனர். குர்ஆனுடைய பெரும்பான்மையான கருத்து, வன்முறையைக் கட்டுப்படுத்துவதோடு தற்காப்பு யுத்த நடவடிக்கையை மட்டுமே அனுமதிக்கின்றது.

3. அவ்வாறு தற்காப்புக்கு மட்டுமே ஜிஹாதை பயன்படுத்தலாம் என்பதை இது உறுதிப்படுத்தியது. உதாரணமாக, ஒரு வெளிநாட்டு சக்தியினால் காலனித்துவப்படுத்துதலில்கூட அங்கு இஸ்லாத்தை நடைமுறைப்படுத்துவதற்குக் கடுமையான அடக்குமுறை கையாளப்பட்டாலேயொழிய, அது ஜிஹாதுக்குப் போதாக்குறையான நிலையாகுமென்று செய்யத் அஹ்மத் கான் வலியுறுத்தினார். (கருத்து வேற்றுமையுண்டு). ஒரு நாட்டை ஆக்கிரமித்து அதன் மக்களைக் குடியேற்றுவதற்குத் தற்காப்பை நியாயப்படுத்தியபோதிலும், ஜிஹாத் ஒரு தற்காப்பு யுத்தம் மட்டுமே என்பதை அப்துஹ் ஏற்றுக்கொண்டார். இந்திய சுதந்திரப் போராட்டத்தின்போது ஓர் அஹிம்சாவாதியும் ஆழ்ந்த முஸ்லிம் பக்தருமான பத்ஷாகான் தனது வீரமிக்க புஷ்தூன் இராணுவத்தை நிராயுதபாணிகளாகப் பிரித்தானியருக்கு எதிராக, சமாதான எதிர்ப்பு அணியாக வழிநடத்தினார். கான் அவருடைய திடமான சமய நம்பிக்கையின்படி குறிப்பிடத்தக்க ஜிஹாதை செயற்படுத்தி அமைதியாகவும் பொறுமையாகவும் எதிர்ப்பைக் காட்டினார்.

## H. மகாஸித் அல் ஷரீஆ

1. வன்முறைத் தீவிரவாதம் மனித உயிரைப் பறிப்பதோடு சொத்துக்களையும் அழிக்கின்றமையினால் ஷரீஆவின் அடிப்படை நோக்கங்களுள் குறைந்தது, வாழ்வதற்கும் சொத்துக்களுக்குமான இரண்டு உரிமைகளையாவது முற்றாக மீறுகின்றது. ஒருவர் மீது காயம் ஏற்படுத்துதல், உயிரைப் பறித்தல், சொத்துக்களை அழித்தல் என்பன ஷரீஆவின் இந்த நோக்கங்களை மீறுகின்றமையினால், இது இஸ்லாமிய விழுமியங்களைப் பாதுகாக்கின்றது என்று ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது.

# அத்தியாயம் - IV

## சகல வடிவங்களிலுமான வன்முறைகளுக்கு இடையிலான தொடர்புகள்.

வீட்டுவன்முறை, இராணுவ ஜிஹாத் மற்றும் ஏனைய வன்முறை வகைகள் எதுவாயினும், அவை வேறுபட்ட சட்டக்கலை மூலங்களிலிருந்து உருவாகலாம். எனினும் அவை பல்வேறுவழிகளில் சமூகம், சமூகவியல், உளவியல் மற்றும் குர்ஆன் உள்ளடக்கம் ஆகியவற்றோடு தொடர்புற்றிருக்கின்றன.

முஸ்லிம்கள் வீட்டு வன்முறையில் அல்லது வன்முறைத் தீவிரவாதத்தில் ஈடுபடுவதற்குச் சட்டரீதியாக இஸ்லாமிய நூற்கருத்துக்களை நம்பியிருக்கமுடியாது. குர்ஆனின் அடிப்படைக் கொள்கை சமாதானம், அமைதி மற்றும் சகல வடிவங்களிலுமான வன்முறைகளையும் ஒழித்தலாகும். இஸ்லாம் வீட்டு வன்முறையினதும் வன்முறைத் தீவிரவாதத்தினதும் கலாசார நடத்தைப் போக்கைக் கட்டுப்படுத்தியது. 7 ஆம் நூற்றாண்டில் ஆண்களுக்கு தம் மனைவியரை அடிக்கும் உரிமை இயல்பாகவே அளிக்கப்பட்டிருந்தது. குர்ஆன் அவ்வுரிமையைக் கட்டுப்படுத்தியது – அத்தோடு ஒழித்தது. அவ்வாறே சில சந்தர்ப்பங்களில் "ஒருயிருக்கு ஒருயிர்" என்று சட்டமாக்கியது. இந்நிலை ஒருயிருக்குப் பதிலாகப் பத்து - அல்லது ஏன் நூறு - உயிர் என்றிருந்த நிலைமையிலிருந்து மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. இவை யாவும் தற்போது நடந்து கொண்டிருக்கும் வன்முறை மீதுள்ள கட்டுப்பாடுகளாகும். ஆகவே, மொத்தத்தில் வன்முறையை ஒழிக்கக் கருதும் இந்த வசனங்களை நமது தற்கால கலாசார விழுமியங்களால் ஏற்றுக்கொள்ள முடியாத, அதைவிடக் கூடுதலான வன்முறையை நியாயப்படுத்துவதற்கு எடுத்துக்கொள்வது குர்ஆனுடைய சாரத்தையே மீறுவதாகும்.

மேலும், ஷரீஆவின் அடிப்படையை ஷரீஆவின் முக்கிய நோக்கங்களான வாழ்க்கை, புத்தி, செல்வம், சுகம், குடும்பம், மனித கௌரவம் ஆகியவை உறுதிப்படுத்துகின்றன. இஸ்லாமியச் சட்டத்தின் எல்லா விளக்கங்களும் மகாஸிதுடன் உடன்படுவதாக இருக்கவேண்டும். வீட்டு வன்முறை, வன்முறைத் தீவிரவாதம் ஆகிய இவை இரண்டும் இந்தப் பாதுகாப்புக்களை மீறுகின்றன. முஸ்லிம் சட்டவல்லுநர்கள் வன்முறை,

மகாஸிதுக்கு மறுதலையாக மேலும் வன்முறைகளை அதிகரிக்கச் செய்யும் என்பதை அறிந்திருந்தனர். வீட்டுச் சூழலில் தமது தாய்மாரைக் கொடுமைப்படுத்தும் தகப்பன்மாரின் பிள்ளைகள் பிற்காலத்தில் தம் மனைவிமாரைக் கொடுமைப்படுத்தும் கணவன்மார்களாக வளரக்கூடிய வாய்ப்பு அதிகம் உண்டு. அதேபோன்று, பொது வாழ்க்கைச் சூழலில் நடக்கும் வன்முறைகள் அதற்கெதிரான வன்முறைகளைத் தோற்றுவிக்கும். அதன் விளைவாக மென்மேலும் மோதல்கள் கூடும். இஸ்லாத்துக்கு முற்பட்ட ஹிஜாஸில் நடந்ததைப் போன்று நவீனகால அரசியல் மோதல்கள் வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டு வன்முறைகள் ஓயாத ஒரு நச்சுவட்டத்தை உருவாக்கியிருக்கும். உண்மையில் இதைத்தான் குர்ஆனும் திருத்தூதரும் சமுதாயத்திலிருந்து ஒழித்துக்கட்ட விரும்பினர்.

இறுதியாக, குர்ஆன் பொறுமையை (சப்ர்) மிக அதிகமாக மெச்சிப் பாராட்டிப் பேசுகின்றது. இதை வீட்டுவன்முறை, வன்முறைத் தீவிரவாதம் ஆகிய இரண்டிலும் பிரயோகிக்க முடியும். உண்மையில் பொறுமையோடு சகித்துக்கொள்ளும் ஜிஹாத், பலப்பிரயோகத்தைப் பாவிக்கும் ஜிஹாதைப் போன்ற பெறுமதியுடையது. எப்படியிருந்தபோதிலும் அதன் கருத்து ஆர்வமின்றி செயற்படாதிருத்தல் என்பதல்ல. பதிலாக, அது அநீதிக்கு எதிராகத் துணிந்து செயற்படுகின்ற, பொறுமையோடு கூடிய வன்முறை சாராத சாத்வீக எதிர்ப்பாகும். திருத்தூதரின் கருத்துப்படி, ஜிஹாத் பாவத்திலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளச் செய்யும் பெரும் போராட்டமும் அதேநேரத்தில் தான் நசுக்கப்படுவதிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காகச் செய்யப்படும் சிறிய முயற்சியும் ஆகும். அதனைத் தன் உள்ளத்தோடு புரியும் உள்வாரி (அக) ஜிஹாத் என்றும் அநீதியை ஒழிப்பதற்குச் செய்யப்படும் வெளிவாரி (புற) ஜிஹாத் என்றும் கருதவும் முடியும். இந்த வெளிவாரி (புற) ஜிஹாத் பல வகைப்படும். உதாரணமாக, சொல்லால் ஜிஹாத் செய்தல் - (ஓர் அநீதியை ஒழிப்பதற்காக வாயினால் மேற்கொள்ளப்படும் தூண்டுதல்), கையால் செய்யப்படும் ஜிஹாத் - (ஓர் அநீதியைத் தடுப்பதற்காகக் கையால் செய்யப்படும் நல்ல வேலைகள்), வாளால் செய்யப்படும் ஜிஹாத் - (அடக்குமுறையிலிருந்து விடுபடுவதற்காகப் பலத்தைப் பிரயோகித்தல்) எனப் பல் வகைப்படும். வாளால் செய்யப்படும் ஜிஹாத் இறுதித் தஞ்சமாகச் செய்யப்படுவதென விளங்குவது முக்கியமானதாகும். ஜிஹாதுடைய எல்லா வழிகளிலும்

முயற்சித்த பின்னரே இறுதியாக, அதுவும் தற்காப்புக்காக மட்டுமே இது மேற்கொள்ளப்படும்.

பெரிய ஜிஹாத் என்பது அல்லாஹ்வின் வழியில் தன்னைக் கட்டுப்படுத்தும் ஒரு முயற்சியாகும். திருத்தூதர் தனது பிரியாவிடை யாத்திரையின் போது அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுவதற்காகத் தன்னுடைய உள்ளத்தோடு (ஜிஹாத் நப்ஸா) எவர் ஜிஹாத் செய்கிறாரோ அவர்தான் அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் புரிபவர் ஆவார் என்று கூறியதாகக் கூறப்படுகின்றது. தனது அக சுபாவத்தைச் சாதுவாக்கி நான் எனும் சுயநலத்தை வெற்றி கொள்வதற்காக இந்த முஜாஹிதீன்கள் பெரும் சக்தியைச் செலவழிக்கின்றார்கள். *அதனால் அவர்களைக் குர்ஆன் "பொறுமையாளர்களுடன்" சமப்படுத்துகின்றது. "அன்றியும் உங்களில் அறப்போர் புரிவோரையும் (முஜாஹிதீன்), பொறுமையாளர்களையும் (ஸாபிரீன்) நாம் அறிந்து (அறிவித்து) விடும் வரை, உங்களை நிச்சயமாக நாம் சோதிப்போம்."* (47:31) இந்த முஜாஹிதீன்கள் வாக்குறுதியளிக்கப்பட்டவர்கள். *மேலும் நம்முடைய வழியில் (செல்ல) முயற்சிக்கின்றார்களே அத்தகையோர் - நிச்சயமாக நாம் அவர்களை நம்முடைய (நேரான) வழியில் செலுத்துகின்றோம்."* (29:69)

சமூக சச்சரவுகளின்போது நல்லதெனப் பெரிதும் விரும்பப்படும் பண்புகளான பொறுமை, சகிப்புத் தன்மை, சுயகட்டுப்பாடு, நான் எனும் தன்னுணர்ச்சியைக் கட்டுப்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஸப்ர் கோட்பாட்டை (4:34) இல் பிரயோகித்துத் திருமண வாழ்வில் ஏற்படும் சண்டை சச்சரவுகளையும் தீர்த்துக்கொள்ளமுடியும். வீட்டில் நடைபெறும் எந்த உடல் சம்பந்தப்பட்ட வன்முறையும் இந்தக் கோட்பாட்டைக் கடுமையாக மீறுகின்றது. கணவனும் மனைவியும் அன்பு, கருணை, பொறுமை ஆகியவற்றினடிப்படையில் ஒருவரோடொருவர் பொறுமையாக நடந்துகொள்ள வேண்டும். மணவாழ்வு தொடர்ந்து சீரழிவதாக இருந்தால் குர்ஆனின் கருத்துப்படி கணவனும் மனைவியும் ஒருவர் மற்றவரிலிருந்து பிரிந்து தனித்தனியாகிவிட வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில் மற்றவர்களோடு ஆலோசனை செய்து மணவாழ்வைத் தொடர்வது பற்றியும் ஆரோக்கியமான மணவாழ்வு பற்றியும் முடிவுக்கு வரவேண்டும். சமாதானமாக ஒன்று சேர்ந்து வாழ்வதே விரும்பத்தக்கதாயினும் அது சாத்தியப்படாதவிடத்து அச்சந்தர்ப்பத்தில்

விவாகரத்து அனுமதிக்கப்படுகின்றது. எப்படியிருப்பினும் எந்த ஒரு கட்டத்திலும் இத்தகைய திருமண வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு வன்முறையை அல்லது பலப்பிரயோகத்தை நாடுவதுதான் சிறந்ததென்றோ பொருத்தமானதென்றோ விதந்துரைக்கப்படவில்லை. அத்தோடு, வரலாற்றுச் சான்றுகளும் வீட்டு வன்முறையைக் குறைப்பது, தொடர்பான சட்டவல்லுநர்களின் கருத்துக்களும் இந்நடவடிக்கையைக் குர்ஆன் அங்கீகரிக்கவில்லை என்பதையும் குர்ஆன் அதைக் குறைக்கவும் ஏன் முற்றாக ஒழிக்கவும் நாடுகிறது என்பதையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

வன்முறை ஒரு மத்தியையும் மத்தியிலிருந்து ஆரையாக விரிந்து செல்லும் எண்ணற்ற 'ஸ்போக்குகளையும்' கொண்ட ஒரு சில்லைப் போன்றது என்று கற்பனை செய்யலாம். சில்லின் மத்திதான் இல்லம். சில்லின் சுற்றளவு, வெளிவட்டம் என்பன சமுதாயத்தையும் சமூகத்தையும் காட்டுகின்றன. வன்முறை வட்டத்தைச் சுழல வைக்கும் ஸ்போக்குகள் பல்வேறு காரணிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இந்தக் காரணிகளுள் இஸ்லாத்தின் அடிப்படை/ஆரம்ப மூலங்கள்பற்றி ஆணும் பெண்ணும் தரும் உறுதியற்ற விளக்கங்கள், ஆற்றல் குறைந்த தலைமைத்துவம், இராணுவத் தீர்வுகளைத் தொடர்ந்தும் நம்பியிருத்தல், அதிகாரம் இல்லாமலாக்கப்பட்ட பெண்கள் என்பன அடங்குகின்றன. வன்முறை முன்னும் பின்னுமாக மத்தி (இல்லம்) க்கும், சுற்றளவு (சமுதாயம்) க்கும் இடையில் ஸ்போக்குகளினூடாக அசைகிறது. உதாரணமாக, வீட்டில் உள்ள வீட்டுவன்முறை சமத்துவமும் சம உரிமையும் சம சந்தர்ப்பமும் இல்லாத விளக்கத்தைக்கொண்ட ஸ்போக்குகளினூடாக சமுதாயத்திற்குச் செல்கிறது. அங்கே அது பெண்களை வெறுக்கின்ற ஒரு சமூகமாக உருவெடுக்கின்றது. மறுபக்கமாகப் பார்த்தால், பெண்களை வெறுக்கின்ற ஒரு சமூகம் சார்ந்த மாதிரியொன்று சுற்றளவிலிருந்து இல்ல மத்திக்குச் சென்று அங்கு வீட்டுவன்முறையைத் தூண்டுகிறது.

முஸ்லிம் பெண்கள் சூரா கவுன்ஸில் (WISE) என்ற வகையில், நாம் அத்தகைய வன்முறையை எமது வீடுகளிலிருந்தும் சமுதாயத்திலிருந்தும் எமது உலகிலிருந்தும் ஒழிக்கத் திடசங்கற்பம் பூண்டுள்ளோம். நாம் அழிவைத் தரும் ஸ்போக்குகளைக்கொண்ட வன்முறைச் சில்லுகளை மாற்றியமைத்து அதற்குப் பதிலாக வன்முறை தவிர்ந்த அமைதிவழித் தீர்வுகளைச் சமத்துவமான பிரதிநிதித்துவத் தலைமைத்துவத்தோடு

தந்தைவழிக் கலாசார மரபால் பாதிக்கப்படாத இஸ்லாமிய விளக்கத்தைக் கொண்டு நிரப்ப உறுதி பூண்டுள்ளோம். நாம் யாவரும் ஒன்றுபட்டுழைத்து அத்தகைய தீர்மானங்களைக்கொண்டு மாற்றீடு செய்து வட்டத்தை மாற்றியமைக்க வேண்டும்.

# அத்தியாயம் - V

## முடிவுரை

"வன்முறைக்கு எதிரான ஜிஹாத் என்பது மேலும் அமைதியானதொரு உலகைக் கட்டியெழுப்புவதற்காகவும் கொடூரத்திற்கும் பாதிக்கப்படுதலுக்குமான மாதிரிகளை வெற்றிகொள்வதற்குமான வன்முறை சாரா அழைப்பு."

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இப்பூவுலக மக்கள் வன்முறையின் அலங்கோலத்தை இகழ்ந்து வந்துள்ளனர். ஆக்கிரமிப்புக்களை நிறுத்த நாம் பாடுபட்டு உழைத்துள்ளோம். யுத்தத்துக்கு முடிவு காணவும் உழைத்தோம். எனினும், நாம் எதைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம்? ஆக்கிரமிப்பை நிறுத்துவதற்காக ஆக்கிரமிக்கிறோம். வன்முறையை ஒழிக்க வன்முறையைப் பாவிக்கிறோம். *"நீங்கள் கொல்லுங்கள். அதற்காக நாம் உங்களைக் கொலை செய்து நீங்கள் இல்லாத ஒரு சிறந்த உலகை உருவாக்குவோம்"* எனும் அனைத்துலகுக்கும் பொதுவான ஒரு நம்பிக்கையின் பங்காளராக இருக்கிறோம். நாம் இன்னும் இந்த முடிவேயற்ற பிடியில், புராதன சிந்தனை வட்டத்தில் சிக்குண்டிருக்கிறோம். நாம் சந்திரனில் உலவிய போதிலும், உலகின் எல்லா மூலை முடுக்குகளுடனும் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டபோதிலும், மனித உறவுகள், சமூகம் சார் இடைத்தாக்கங்கள், பூகோள அரசியல் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் எமது குடும்பங்களும் சமுதாயங்களும் *"தீமையைத் தடுப்பதற்கு அதிகாரப் பலப்பிரயோகத்தில் நம்பிக்கை வைத்துள்ளோம்"* என்ற சிந்தனைப் பாங்கில் மருண்டவர்களாக உள்ளோம்.

## A. தவறான சிந்தனை கொடூரத்துக்கு இட்டுச் செல்கிறது.

குர்ஆனின் கருத்துப்படி பௌதிக, உலோகாயத நிலைமைகள், எமது எண்ணங்களினாலும் அகம் எனும் தன்னுணர்ச்சியினாலும் உருவாக்கப்பட்டன. இது ஒரு மத்திய கருப்பொருள். மக்கள் தாமாக மாறாத வரையில் நிலைமைகள் மாறுவதில்லை. *"நிச்சயமாக அல்லாஹ் எந்த ஒரு சமுதாயத்தின் நிலையையும் மாற்றுவதில்லை - தங்களை தாங்களே தங்களுக்குரியதை மாற்றிக்கொள்ளாத வரையில்"* (13:11) வேறு வார்த்தையில் கூறுவதானால், ஒரு குறிப்பிட்ட

சிந்தனைப் பாங்கினதும் மனப்பாங்கினதும் விளைவாகவே ஒரு நடத்தை உருவாகின்றது.

மனிதனின் தீய எண்ணத்தைப் பற்றித் திருக்குர்ஆன், திருத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அருளிய முதலாவது அத்தியாயத்திலே குறிப்பிடுகின்றது. *"மனிதன் நிச்சயமாக வரம்பு மீறுகிறான்."* (96:6) குர்ஆன் பயன்படுத்தும் *'லயத்கா'* என்ற சொல் *"மீறிப்பாய்தல்" "வரம்பு மீறுதல்"* என்று பொருள்படும் மூல வினைச் சொல்லிலிருந்து வருவதால் சிலர் இந்த வசனத்தை "ஒரு மனிதன் எல்லா எல்லைகளையும் மீறுகிறான்" என்று மொழிபெயர்ப்பர். இந்த சுபாவம் எங்களனைவரையும் பாதிக்கின்ற பாதகமான சர்வதேச மனித குணமாக சர்வாதிகாரத்துக்கு இட்டுச் செல்கிறது. வெவ்வேறு நாடுகளின் நிலைக்கேற்ற வித்தியாசமான தலைமைத்துவங்களை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

குர்ஆனின் கருத்துப்படி, மனிதரிடம் அதிகாரம் செலுத்தும் ஒரு சுபாவம் இருக்கிறது. உலகைப் பற்றிய எமது சொந்தக் கருத்துக்களை வினாவுவதற்குப் பதிலாக எமது கருத்துக்கு ஏற்றதாக உலகம் மாறவேண்டும் என்றும் எமது எதிர்பார்க்கைகளுக்கு ஏற்றதாக இணக்கமாக இருக்கவேண்டும் என்றும் எதிர்பார்க்கிறோம். *"மாற்றிக்கொள்ளுங்கள்"* வசனம் 13:11, இவை யாவற்றையும் தலைகீழாக மாற்றுகிறது. நாம் தவறான நம்பிக்கையிலிருந்து விடுபட்டது போன்று நடந்தும் கட்டளைகளைப் பிறப்பித்தும் உலகை மாற்றியமைப்பதற்குப் பதிலாக எல்லாம் வல்லவனான உயர்ந்த ஆட்சியதிகாரமுடைய இறைவனுக்கு அடிபணியுமாறும் எமக்கே சொந்தமான நாம் சிந்திக்கும் முறையைப் பரிசீலனை செய்யுமாறும் கேட்கப்படுகின்றோம். இவ்வாறுதான் குர்ஆன் தூதுவர்களைச் சமர்ப்பிக்கின்றது. உதாரணமாக யூசுப் (யோசேப்பு) அநீதியாக கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும்போது அவருடனிருந்தவர்களுக்கு உத்தரவிடுகிறார். *"அவையன்றி நீங்கள் வணங்குபவை வெறும் (கற்பனைப்) பெயர்களைத் தவிர வேறொன்றும் இல்லை. நீங்களும், உங்கள் மூதாதையரும் அவற்றைப் பெயர்களாக வைத்துக்கொண்டீர்கள். அல்லாஹ் இதற்கு யாதோர் ஆதாரத்தையும் இறக்கி வைக்கவில்லை. அல்லாஹ் ஒருவனுக்கேயன்றி (மற்றெவருக்கும்) அதிகாரம் இல்லை."* (12:40) எந்த சக்தியுமற்ற அத்தகைய பொய்யான பெயர்கள் யதார்த்தத்தைக் காணும் எமது புலக்காட்சியைக் கட்டுப்படுத்துவதுடன் நாம் சமாதானத்தை மீறி நடக்கவும் காரணமாகின்றன.

குர்ஆன் தவறான சிந்தனையை அத்துமீறலுடனும் வன்முறையுடனும் இணைக்கின்றது. ஏனெனில், யதார்த்தத்தை/பேருண்மையைக் கட்டுப்படுத்தலாம் என நினைக்கின்றவர்கள் அந்த யதார்த்தத்தை/ பேருண்மையைக் கட்டுப்படுத்தப் பல்வேறு வழிவகைகளையும் பயன்படுத்துவர். அத்தகையோர் மற்றவர்களை அடிபணிய வைத்து மாற்றத்தைச் செயற்படுத்துவார்கள்.

“மாற்றிக்கொள்ளுங்கள்” என்ற வசனம் ஒரு முக்கியமான முழுமையான வித்தியாசமான கருத்தை உருவாக்குகின்றது. உலகை மாற்றியமைப்பதற்குப் பதிலாக முதலில் எமது மனப்பாங்கையும் சிந்தனையையும் இறுதியாக எம்மையும் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று குர்ஆன் எமக்குச் சொல்கிறது. அப்போது மட்டுமே எம்மைச் சூழவுள்ள உலகம் மாறும். உங்களை நீங்களே மாற்றிக்கொள்ளுங்கள். மற்றவை மாறும். 11ஆம் சூராவில் எல்லாத் திருத்தூதர்களும் மறுமைக்காக மட்டுமன்றி இம்மைக்கும் இப்போதைக்கும் சுபிட்சத்துக்குமான வழி, வருந்தி பாவமன்னிப்புத் தேடுதல் என்பதைத் தத்தம் சமூகங்களுக்குக் கூறி அழைப்பு விடுக்கவே வந்தார்கள். உலகுக்கு உத்தரவு விடுவதை விடுத்து, எம்மைச் சூழவுள்ள பிரபஞ்சத்தையும் அதன் பிரமாண்டமான வடிவமைப்பையும் வியக்க வைக்கும் அற்புதங்களையும் அவதானிக்குமாறு கேட்கப்படுகின்றோம். குர்ஆன், நட்சத்திரங்களையும் பகலும் இரவும் ஒன்றையொன்று மூடிக்கொள்ளும் முறையையும் சூரியனையும் சந்திரனையும் வன விலங்குகள் ஒன்றாகக் கூட்டம் கூட்டமாகச் செல்லும் அழகையும் பார்க்கும்படி எமக்குச் சொல்லுகிறது. அது எமக்குள்ளும் எமக்கு வெளியேயும் காணப்படும் படைப்பினங்களின் அடையாளங்களைப் பற்றிப் பேசுகின்றது. *“நிச்சயமாக வேதமாகிய இது உண்மையானது தான் என்று அவர்களுக்குத் தெளிவாகும் வரையில் (உலகின்) பல பாகங்களிலும் அவர்களிலும் நம்முடைய அத்தாட்சிகளை அவர்களுக்கு நாம் காண்பிப்போம்.”* (41:53)

இதுவே எமது தீய எண்ணத்துக்குச் சிகிச்சையாக இருந்தால் எமது தீய எண்ணங்களுக்கான காரணத்தைக் குர்ஆனும் எமக்குத் தருகின்றது. நாம் ஏன் வன்முறையிலும் பலாத்காரத்திலும் ஈடுபடுகின்றோம் என்பதை அது விளக்குகின்றது. எங்கும் நாம் காணும் காட்சிகளில் பல்வேறு வகையான நடத்தை மாதிரிகளைக் காண்கிறோம். அவற்றுள் சிலர் யதார்த்தத்தைக் கட்டுப்படுத்திப் பலாத்காரத்தைப் பிரயோகிக்கின்றனர்.

மற்றும் சிலர், சமாதானமாக இருப்பவர்களாகவும் தம்மைத்தாமே மாற்றிக்கொள்ள விரும்புபவர்களாகவும். இருந்து இதமாக மாற்றத்தை அடைந்து கொள்கின்றனர்.

## B. நம்ரூத் சிந்தனைப் பாங்கு: இயற்கைக் கோட்பாடுகளை மீறுதல்.

திருத்தூதர் இப்றாஹீமுக்கும் (ஆபிரகாம்) நம்ரூதுக்குமிடையில் நடைபெறுகின்ற உரையாடலில் இந்த இருவருக்குமிடையில் உள்ள வேறுபாடு காட்டப்படுகின்றது. இப்றாஹீம் பிரபஞ்சத்துக்குப் பொறுப்பாளனாகிய எல்லாம் வல்லவனை சமாதானமாகவும் அமைதியாகவும் ஏற்று அவனுக்குக் கீழ்ப்படியுமாறு மக்களை நம்பச் செய்வதற்கு அறவொழுக்க முயற்சியைக் கையாண்டார். மறுபக்கமாக நம்ரூத் தானே யதார்த்தத்தை, பேருண்மையைக் கட்டுப்படுத்துவதாக எண்ணுகிறான். அவன் இப்றாஹீமை ஏளனம் செய்து பரிகசித்து அவனது அதிகாரத் திமிரை வெளியில் காட்டுகின்றான். அதற்குச் சான்றாக, கொல்லும் ஆற்றல் தனக்கிருப்பதாக எடுத்துக்காட்டுகிறான். *“அவன் சொன்னான், நானும் உயிர்ப்பிக்கச் செய்வேன். மரணிக்கவும் வைப்பேன்.”* (2:258). அப்போது இப்றாஹீம் அவனிடம் கேட்கிறார், “அப்படியாயின் நிச்சயமாக அல்லாஹ் சூரியனைக் கிழக்கிலிருந்து (உதிக்கச் செய்து) கொண்டு வருகின்றான், நீ அதை மேற்கிலிருந்து கொண்டு வா” (2:258) என்றுகூற நம்ரூத் ஒன்றும் பேச முடியாதவனாக வாயடைத்துப் போனான். இப்றாஹீமுக்கு விடயம் விளங்கிவிட்டது. அவன் தனது சர்வாதிகாரத்தைப் பாவித்து இயற்கையின் கோட்பாட்டை மீறலாம் என்று நினைத்தான். அவ்வாறெனில் அவன் ஒரு மாயையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றான்.

இப்றாஹீம், நம்ரூதுக்கு அவன் மக்களை வதைத்தாலும் கொலை செய்தாலும் பேருண்மை அவனது நாட்டங்களுக்கு இணங்கமாட்டாது என்பதையும், அவனுக்கு நட்சத்திரங்களினதும் கிரகங்களினதும் நகர்வைக் கட்டுப்படுத்த முடியாது என்பதையும் எடுத்துக்காட்டுகிறார். அதேபோன்று இயற்கையின் இன்னொரு கோட்பாடுதான் மனிதனின் கௌரவமாகும். குர்ஆன் கூறுவதுபோன்று அது அல்லாஹ்வால் அருளப்பட்டதாகும். *“நாம் ஆதத்தின் வழித்தோன்றல்களுக்கு கண்ணியம்*

*அளித்துள்ளோம்.”* (17:70). ஆகவே, இந்த விடயத்தில் எமக்குத் தெரிவுக்கு இடமில்லை. ஏனெனில், பிரபஞ்சத்தை ஆட்சி செய்யும், என்றும் நிலைத்திருக்கும் சட்டங்களை நாம் கட்டுப்படுத்தாததைப் போலவே அதுவும் நடைபெறுகிறது. உதாரணமாக, அல்லாஹ் இரு கூறு ஐதரசனும் ஒரு கூறு ஒட்சிசனும் சேர்ந்து நீர் உருவாகும் என்ற கோட்பாட்டை ஆக்கியபோது எங்களைக் கலந்தாலோசிக்கவில்லை. *“வானங்களையும், பூமியையும் சிருஷ்டிப்பதற்கும் மேலும் அவர்களையே சிருஷ்டிப்பதற்கும் அவர்களை நான் (உதவிக்காக) முன்னிலையாக்கிக் கொள்ளவில்லை* (18:51). அவ்வாறே நாம் நீரோடு இடைத்தாக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள முடியுமெனினும் $H_2O$ வை மாற்ற முடியாது. மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ள இந்தக் கண்ணியக் கோட்பாட்டை மலினப்படுத்த முடியாது. ஏனெனில், அது தொடர்பாக அல்லாஹ் எம்மிடம் கலந்தாலோசிக்கவில்லை.

இருந்தபோதிலும், பல்லாயிரம் ஆண்டுகளாக நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம். நாம் இன்னும் மற்றவர்களை, அவர்களது உயிர்களை அச்சுறுத்தி அல்லது அவர்களது கண்ணியத்தைப் பலவீனப்படுத்திக் கட்டுப்படுத்த முடியும் என்று நம்புகிறோம். நம்ரூதுடைய சிந்தனைப் பாங்கில் சிக்குண்டு இருக்கிறோம். பேருண்மை மீது அதிகாரம் செலுத்தி நம்மைச் சுற்றி உள்ள உலகை அச்சுறுத்த முயற்சித்துக்கொண்டு இருக்கிறோம். இந்தச் சிந்தனைப் பாங்கு இயற்கையோடு அமைதியாக வாழ்வதற்குப் பதிலாக இயற்கையைத் தாழ்த்த எத்தனிப்பது வரை வியாபித்துள்ளது. நாம் எமது காலநிலையைக் குறை சொல்லும் முறையிலிருந்து, நாடுகளை அழிப்பதற்காக யுத்த ஆயுதங்களை உற்பத்தி செய்வதுவரை எமது சிந்தனை எல்லா மட்டங்களிலும் ஊடுருவியுள்ளது. நம்ரூதைப் போன்று உண்மையில் எமக்கு பிந்தியதைச் செய்ய முடியும். எமக்கு உயிர்களைப் பறிக்கலாம். (உண்மையில் நாம் அதைச் செய்து கொண்டுதான் இருக்கிறோம்.) எந்த இயற்கைக் கோட்பாடுகளுக்கும் சவால் விடுக்கும் உரிமை இல்லாதபோதிலும் சாந்தம், அன்பு, கருணை மானிடகௌரவம் ஆகியவற்றை மீறியும் ஏமாற்றமடைந்த நிலையிலும் அவற்றைச் செய்து கொண்டுதான் இருக்கிறோம்.

இந்தப் பலாத்காரமான சிந்தனைப் பாங்கில் ஒருவர் இயற்கையுடனும் மற்றவர்களுடனும் மிக முக்கியமாக அவர் தன்னோடு தனக்குள்ளேயும் யுத்தம் புரிந்து கொண்டிருக்கும் நிலையிலேயே இருக்கிறார். குர்ஆனின்

அடிப்படையில் மனித சிந்தனையில், காணப்படும் குழப்பநிலையே உண்மையான பிரச்சினையாகும். “வாக்குவன்மைக்குழப்பநிலை” என மீண்டும் மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் தொடர்ச்சியாக பேருண்மைக்கு எதிரானவர்களாக இருக்கிறோம். இன்னும் நாம் பேருண்மை மீது அதிகாரம் செலுத்தும்போது குர்ஆனின் கருத்துப்படி நாம் இரு வடிவங்களில் ஒன்றாக இருக்கிறோம். ஒன்றிருக்கில் கொடுங்கோலன் இல்லையேல் துன்புறுத்தப்பட்டவர். இந்த இருவரும் வன்முறையாளர்களே. நான் பேருண்மை வெளிப்படையாக இருக்கும்போது அதனோடு இணங்கியதாக இல்லாவிட்டால் நான் ஒன்றிருக்கில் அதை மாற்றுவதற்குப் பலாத்காரத்தைப் பிரயோகித்து ஒரு கொடுங்கோலனாவேன் அல்லது எதுவும் செய்ய முடியாதவனாக, உதவியற்றவனாக, பாதிக்கப்பட்டவனாக நினைத்து சந்தர்ப்பம் கிடைத்தால் எனது நிலையை மறுபக்கமாக மாற்றி அமைக்க நினைப்பேன். நான் பாதிக்கப்பட்டவனாவேன். அவ்வாறு கொடுங்கோலனும் பாதிக்கப்பட்டவனும் ஆகிய இருவரும் பலம் வாய்ந்த ஒரு வட்டத்தினுள் அகப்பட்டு மூடப்பட்டவர்களாவர். நசுக்குவோரும் நசுக்கப்பட்டோரும் ஆவோம். இவ்விருசாராரும் வெற்றியின்போது வெறுமனே தமது நிலைகளை மாற்றிக்கொள்வோம். பாதிக்கப்பட்டவன் ஒரு கொடுங்கோலனாக வருவான். கொடுங்கோலன் ஒரு பாதிக்கப்பட்டவனாவான். வட்டத்தை உடைத்துவிடுவதற்குப் பதிலாக இது தொடர்ந்து நடைபெறுகிறது.

குர்ஆன் மூன்றாவது மாற்றுக் கருத்தொன்றை முன்வைக்கின்றது. அது தான் தூதுத்துவ மாதிரி. கொடுங்கோலனும் அல்ல; பாதிக்கப்பட்டவனும் அல்ல. அதன் செயற்பாடுகள் பேருண்மையை எதிர்த்து நடைபெறுவதில்லை. பதிலாக அதனோடு இணங்கிச் செல்கின்றது. இஸ்லாம் என்ற உண்மை நிலையிலிருந்து அன்போடும் ஊக்கத்தோடும் பேருண்மைக்கு அடிபணிவர். தூதுத்துவ மாதிரியைப் பின்பற்றுபவர்கள் தமக்கெதிரான கொலை அல்லது நாடு கடத்தல், அச்சுறுத்தலின் போது நன்றி செலுத்துதல் மற்றும் பேரன்புகொள்ளுதல் என்ற இடத்திலிருந்து தொழிற்படுவர். நாம் குர்ஆனை வாசிக்கும்போது *“அல்லாஹ்வின் மீது (முழுமையாக) நம்பிக்கை வைத்திருக்காதிருக்க எங்களுக்கு என்ன (நேர்ந்தது)? திட்டமாக அவன் எங்களுடைய வழிகளை எங்களுக்குக் காண்பித்துள்ளான். மேலும் (நிராகரிப்போரே) நீங்கள் எங்களுக்கு இழைக்கும் துன்பங்களை நிச்சயமாக நாங்கள் பொறுத்துக்கொண்டு உறுதியாக இருப்போம்.” இன்னும் (சகல காரியங்களையும்*

*அல்லாஹ்விடம் ஒப்படைத்து முழுமையாக) நம்பிக்கை வைக்கிறவர்கள் யாவரும் அல்லாஹ்வின் மீதே முழுமையாக நம்பிக்கை வைக்கட்டும்."* (14:12).

இந்த வன்முறை சாராத தூதுத்துவ கலந்துரையாடல் மீது ஏற்படும் பொறுப்புணர்வு, பலாத்காரத்தைப் பிரயோகிப்பதற்கு அவர்களிடம் உள்ள உடல் ஆற்றலின் மீதுள்ள நம்பிக்கையிலிருந்து தோன்றுவதில்லை. அல்லது துன்புறுத்தப்பட்டவர்கள் அவர்களின் வேறுவழியின்றி ஏற்றுக்கொள்ளும் தளர்ந்த மனநிலையின் பிரதிபலிப்பாக வருவதுமில்லை. அதற்குப் பதிலாக சத்தியத்தின் மீது உறுதியாக நிற்பதன் மூலமும் மற்றவர்கள் மீது பலாத்காரமாகத் திணிக்கத் தேவையற்று இருப்பதிலிருந்தும் அமைதியிலிருக்கும் சக்தியின் மீது உறுதியாக நிற்பதிலிருந்தும் வருகின்றது. அத்தகைய அதிகாரத்தோடு பேசும் திறன் அவர்களுக்குத் தீமையின் வலிமையில் கிஞ்சித்தும் நம்பிக்கை இல்லை என்பதை எடுத்துக்காட்டுகிறது. அதன் விளைவாக அவர்களுக்கு அச்சுறுத்தலுக்கு முன்னால் முற்றாக எந்தப் பயமும் இல்லை. பிர்அவ்ன், மூஸா, அந்த நிலத்தில் வாழ்ந்த நசுக்கப்பட்ட மக்கள் ஆகிய மூன்று பிரிவினருக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் இது மிக அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

## C. பிர்அவ்ன் மாதிரி: பலாத்காரம், வன்முறை, திமிர்.

குர்ஆன், கொடுங்கோன்மையின் மிகச்சிறந்த உதாரணமாக பிர்அவுனைக் காட்டுகிறது. பேச்சிலும் மனப்பாங்கிலும் செயலிலும் தனது கைவசமிருந்த அதிகாரம், சக்தி, "பேச்சுத்திறன்குழப்பம்" ஆகியவற்றால் போதையுற்றிருந்தான். குறிப்பாக, அவனது கடுங்கோபம் பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் எதிராக எவ்வாறு திருப்பப்பட்டிருந்தது என்பதைப் பார்ப்பது பயன்தரும். அவனும் அவனது ஆட்களும் இவ்வாறு சொல்லுகிறார்கள். *"எவர்கள் நம்பிக்கை கொண்டு இவர்களுடன் சேர்ந்துவிட்டார்களோ அவர்களனைவரினதும் ஆண் மக்களையும் கொன்றுவிடுங்கள்; பெண்மக்களை உயிரோடு விட்டுவிடுங்கள்."* (40:25). குர்ஆன் ஆனது, கொடுமை எவ்வாறு சிறப்பாகத் தொழிற்படும் என்பதை விசேடமாகக் காட்டுகின்றது. பொது வாழ்க்கையில் நடைபெறும் அநீதியாகவோ, யுத்த நடவடிக்கையாகவோ மட்டுமல்லாமல் வீட்டினுள்ளே கட்டுண்டிருக்கும் நிலையில் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிராக

நடைபெறும் துஷ்பிரயோகத்தையும் வன்முறையையும் காட்டுவதாகவும் அமைகிறது. வீட்டிற்கும் பொது வாழ்க்கைக்கும் இடையில் நடைபெறும் இத்தொடர்பு குர்ஆனில் மீண்டும் மீண்டும் வரும் ஒரு கருப்பொருளாகும். அதைப் பல கூற்றுக்களிலும் வணக்கங்களிலும் காண்கிறோம்.

உதாரணமாக, ஸூரா 25 இல் அல்லாஹ்வை உண்மையாக வணங்குபவர்களின் குணங்கள், தன்மைகள் பற்றி எமக்குத் தரப்பட்டுள்ளது. *"எங்கள் இரட்சகனே, எங்கள் மனைவியர்களிடமிருந்தும் எங்கள் சந்ததிகளிலிருந்தும் எங்களுக்கு கண் குளிர்ச்சியைத் தந்தருள்வாயாக. அன்றியும், பயபக்தியுடையவர்களுக்கு எங்களைத் தலைவர்களாகவும் ஆக்குவாயாக."* (25:74). இந்த வசனம் நேரடியாகக் குடும்பத்தின் தலைமைத்துவத்தை சிறந்த பொதுத்துறைத் தலைமைத்துவத்துடன் இணைக்கின்றது. பிந்திய தலைமைத்துவத்துக்குத் தகுதி பெறுவதற்குக் குடும்பத்தில் பேரானந்தமும் அமைதியும் முன்தேவைகளாகும். உண்மையில், குர்ஆன் தனிப்பட்ட வாழ்விலும் பொது வாழ்விலும் அசலானதும் உறுதியானதுமான நல்லொழுக்க வாழ்க்கையை அன்பளிப்பாகக் கொடுக்கின்றது. அது சமூகத்தின் ஏனையவர்களை மாற்றியமைக்கும் முயற்சிக்கு முன்னர் ஆரோக்கியமான, விழிப்படைந்த வீட்டுச் சூழமைவை உருவாக்குவதற்கான தலைவர்களுக்குத் தேவையான உறுதியான நல்லொழுக்கப் பண்புகளை அவர்களில் நிலைநாட்டுகிறது. மீண்டும் இது பரந்த உலகையும் சமூகத்தையும் மாற்றுவதற்கு முன்னர் தனது சுயத்தை அதாவது, தன்னைத் திருத்திக்கொள்ளல் எனும் கருப்பொருளுடன் இணைக்கிறது.

பிர்அவ்ன் தனது மூதாதையர்களின் உண்மைகளைப் பாதுகாப்பதால் தன்னை நல்லதொரு தலைமைத்துவத்தின் மாதிரியாக எண்ணிக்கொண்டான். எப்படியிருந்தபோதிலும், அவன் பலாத்காரமாகப் படையைப் பயன்படுத்தியதால் அச்சுறுத்திப் பயங்கரமான ஒரு சூழலை உருவாக்கியதன் மூலம் தனது சொந்த மரபையே மீறுகிறான். அவன் கூறுகிறான், *"என்னை விட்டுவிடுங்கள், மூசாவை நான் கொலை செய்து விடுவேன். மேலும் அவர் (தன்னைக் காத்துக்கொள்ள) தன் இரட்சகனை அழைக்கட்டும் அவர் உங்களுடைய மார்க்கத்தை மாற்றிவிடுவார் அல்லது பூமியில் குழப்பத்தை வெளிப்படுத்துவார் என்று நான் அஞ்சுகிறேன்."* (40:26) இதோ மீண்டும் மூஸா திருத்தூதர்களின் சம்பிரதாயப்படி பதிலளிக்கின்றார். *"கணக்கு வாங்கப்படும் நாளை நம்பிக்கை கொள்ளாத*

*கர்வங்கொண்ட (தீயவர்களாகிய) ஒவ்வொருவரையும் விட்டு என் இரட்சகனும் உங்கள் இரட்சகனுமாகிய அவனிடமே நிச்சயமாக நான் பாதுகாவல் தேடுகிறேன்."* (40:27). குர்ஆனில் பிர்அவ்ன் தொடர்பான இத்தகைய பல காட்சிகள் உள்ளன. உண்மையில் குர்ஆனில் பலமுறை மீட்டி மீட்டிக் கூறப்பட்டுள்ள கதை இது. அதில் வன்முறை மற்றும் பலாத்கார ஆட்சியின் மாதிரியில் காணப்படும் விசேட குணங்களும் தன்மைகளும் பாங்குகளும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதோடு பிள்ளைகளும் பெண்களும் நடத்தப்பட்ட விதமும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

## D. பல்கீஸ் இராணி மாதிரி : பலாத்காரமின்மை, சமாதானம், புத்திசாதுரியம்

மேலே குறிப்பிடப்பட்டவற்றுக்கு முரணாக ஸூரா 27 இராணி பல்கீஸின் அரச சபைக் காட்சியைத் தருகின்றது. ஆட்சிமுறை பற்றியும், தலைமைத்துவம் பற்றியும் குர்ஆன் குறிப்பிடும் சிறந்த உதாரணமாகப் பலாத்காரமற்ற, புத்திசாலித்தனமான தலைவியாக இராணி பல்கீஸின் ஆட்சி விளங்குகின்றது. மன்னர் சுலைமானிடமிருந்து அச்சுறுத்தும் கடிதமொன்று கிடைத்தபோது இராணி தன்னுடைய மக்களோடு கலந்துபேச முடிவுசெய்தார். இராணி கூறினார், *"என்னுடைய (இந்த) விஷயத்தில் எனக்கு ஆலோசனையைக் கூறுவீர்களாக; எனக்கு நீங்கள் முன்னிலையாகி (அபிப்பிராயம்) கூறாத வரையில் நான் எவ் விஷயத்தையும் முடிவு செய்பவள் அல்ல."* (27:32) தன்னுடைய அரசுக்கு எதிராகக் கடுமையான ஓர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டபோதும்கூட தன்னிச்சையாகவோ, பகைமை பாராட்டியோ பிரதிபலிக்கவில்லை. அதற்குப் பதிலாக, இராணி ஒன்று சேர்ந்து முடிவெடுக்கும் செயன்முறையை உருவாக்கிக்கொள்கிறார். இராணியின் நடவடிக்கையின் விளைவுகள் யாவை? தனது மக்களிடம் அதிகாரத்தை ஒப்படைத்ததால் அவர்கள் மேலும் இராணியை நம்பி அவரைப் பின்பற்றி நடக்க விரும்பினர். அச்சத்தினாலல்ல; ஆனால் அவள் மீதிருந்த திடநம்பிக்கையினால். (பிர் அவ்னின் அரச சபை போலன்றி உண்மையில் மேலும் சக்தி வாய்ந்தவராக ஆக்கப்பட்டார்.) அவர்கள் கூறினார்கள், *"நாம் வல்லமை மிக்கவர்களாகவும் கடுமையாகப் போரிடக்கூடியவர்களாகவும் இருக்கிறோம். இதற்குமேல் முடிவெடுப்பது உங்கள் பொறுப்பு. என்ன ஆணையிடுவது என்பதை நீங்களே சிந்தித்துக்கொள்ளுங்கள்."* (27:33).

அதற்குப் பதிலாக இராணி மிக அபூர்வமான ஒரு முடிவுக்கு வருகிறார். *இராணி கூறினார், "அரசர்கள் ஏதேனும் ஒரு நாட்டில் புகுந்தால் அதனை அழித்துவிடுவார்கள். மேலும் அங்கு கண்ணியமாக வாழ்பவர்களைக் கேவலப்படுத்தி விடுவார்கள். இதைத்தான் அவர்கள் செய்கிறார்கள்."* (27:34).

குர்ஆன், மிகவும் பலம்வாய்ந்த ஓர் இராணியுடைய அரசவையைப் பற்றி மட்டும் இங்கு விபரிக்கவில்லை. ஆனால், அது பல்கீஸ் இராணியுடைய உலகப் பார்வையையும் அரசர்களின் அழிவு முறைகளையும் அத்துடன் இந்த வரலாற்றைத் தொடர்வதை நிறுத்தி அதிலிருந்து வெளியேறுவதற்கான முடிவையும் அறிமுகம் செய்கிறது. இராணி கூறினார், *"அவர்களுக்கு நான் ஓர் அன்பளிப்பை அனுப்பப்போகிறேன். பின்னர் என்னுடைய தூதுவர்கள் என்ன செய்தியைப் பெற்றுத் திரும்பி வருகின்றார்கள் என்பதைப் பார்க்கலாம்."* (27:35). உண்மையில் இந்த நடவடிக்கையால் சுலைமான் திருப்தியடையவில்லை. எனினும், வன்முறை சாராத ஓர் இராணியின் அதிகாரத்தினாலும் அமைதியான போக்கினாலும் ஞானத்தினாலும் கதை யுத்த நடவடிக்கையிலிருந்து பிரச்சினை தீர்த்தலுக்கு மாறுகின்றது.

பல்கீஸின் கதையின் முக்கியத்துவம் யாதெனில், திருத்தூதர்களைப் போன்று பழைய சிந்தனைப் போக்கிலான பலாத்காரத்தைப் பாவிக்க மறுத்தமை அவரது அதிகாரத்தின் பலவீனத்தின் விளைவாக ஏற்படவில்லை. அதற்குப் பதிலாக அவரது உணர்வுபூர்வமான முடிவு, வரலாற்றுப்போக்கைக் கைவிட்டுவிடுவதிலும் எதிர்த்து நின்று பலத்தைப் பிரயோகிக்கும் சிந்தனைப் போக்கை மறுப்பதிலும் இருந்து வருகின்றது. அவர் அதில் வெற்றிபெறுகிறார். பல்கீஸ் இராணிக்கு சுலைமானுடனான மோதலை சமாதானமாகவும் வன்முறை சாராது அஹிம்சையாகவும் தீர்த்துக்கொள்ளும் ஆற்றல் இருந்தது என்பதை மட்டுமன்றி, இந்த மூன்றாவது பதிலீட்டு மாதிரியின் சாதிக்கும் ஆற்றலையும் எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. இருபக்க அழிவுகளையும் தவிர்த்த இந்தத் தீர்வு, அச்சுறுத்தலுக்கும் ஆக்கிரமிப்புக்கும் முன்னால் கௌரவமளித்து தாராளத் தன்மையைக் காட்சிப்படுத்திய அவருடைய ஞானத்தினாலும் இராஜதந்திரத்தினாலும் ஏற்பட்டது. இந்த மாதிரிகள் அனைத்திலும் வேறுபட்ட உலகப் பார்வைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு சீரான தன்மையை அவதானிக்கிறோம். ஆட்சியைப் பற்றியும் மக்களைப் பற்றியும்

மாற்றத்தை அடைந்துகொள்ளும் வழிகள் பற்றியும் கொண்டிருக்கும் வித்தியாசமான மனப்பாங்குகள், நடத்தைகள் ஆகியவற்றைப் பொறுத்தும் இந்த விளைவுகள் ஏற்படுகின்றன. அதனாலேதான் முஸ்லிம்கள் குர்ஆனின் ஆரம்ப ஸூராவில் - அத்தியாயத்தில் அல்லாஹ் எங்களை மூன்றாம் பாதையில் உறுதியாக வைத்திருப்பான் என்று ஓதுகின்றனர். கொடூரமான வழியோ அல்லது பாதிக்கப்பட்டவர் வழியோ அன்றி அது அன்பு, கருணை, நீதி ஆகியவற்றைக் கேட்டு மன்றாடும் சமாதானத்தை வேண்டுவோரின் பாதை என்று கூறுகின்றனர். உண்மையில், குர்ஆனில் உள்ள எல்லா ஸூராக்களும் அல்லாஹ்வின் திருநாமங்களில் அடங்கியுள்ள அன்பையும் கருணையையும் உள்ளடக்கிய *"அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்"* என்றே ஆரம்பிக்கின்றன. இந்தப் பெயர்களை எண்ணற்ற தடவைகள் மீட்டுகிறோம். ஏனெனில், ஆத்மஞானி இப்னு அரபி அவர்கள் சொன்னதுபோன்று அல்லாஹ்தான் படைத்தவன் என விசுவாசம் கொள்வோர் இப்பிரபஞ்சத்தின் தோற்றத்துக்கு மூலகாரணமாய் அமைந்திருப்பது அவனது தெய்வீகப் பண்புகள்தாம் என்பதை அறியாத நிலையில் இருக்கின்றனர். அதன் விளைவாகவே அல்லாஹ் குர்ஆனில் *"என்னுடைய அருளோ எல்லா வஸ்துக்களிலும் சூழ்ந்து விசாலமாகியுள்ளது"* (7:156). என்று பிரகடனம் செய்கிறான்.

ஆகவே, நாம் அல்லாஹ்விடம் *"எங்களுக்கு நேர்வழியைக் காண்பித்தருள்வாயாக "அவ்வழி" எவர்களுக்கு நீ அருள்புரிந்தாயோ அவர்களின் வழி."* (1:7) அவ்வாறு செய்யும்போது நாம் பலாத்காரமல்லாத வசனத்தைக் கேட்கிறோம். *"(சத்திய இஸ்லாம்) மார்க்கத்தில் எத்தகைய நிர்ப்பந்தமும் இல்லை.... எவர் அல்லாஹ்வை விசுவாசிக்கின்றாரோ அவர் திட்டமாக, அறுந்து போகாத, பலமான கயிற்றைப் பற்றிப் பிடித்துக் கொண்டார்."* (2:256). எல்லா முஸ்லிம்களும் இந்தத் தலைமை வாசகத்தைப் பொதுவாக எல்லா முஸ்லிம் வீட்டுச் சுவர்களிலும் தொங்குகின்ற வசனத்தோடு சேர்த்துக்கொண்டால் நல்லது என்று வேண்டுகிறோம்.

## உசாத்துணை நூல்கள்


Khaled Abou El Fadl, *Conference of the Books: The Search for Beauty in Islam* (Lanham, MD: University Press of America, 2001).

Abdulhamid A. AbuSulayman. *Marital Discord: Recapturing the Full Islamic Spirit of Human Dignity* (London/Washington DC: The International Institute of Islamic Thought, 2003).

Asma Afsaruddin, "Competing Perspectives on Jihad and Martyrdom" in *Witnesses to Faith? Martyrdom in Christianity and Islam,* ed. Brian Wicker (Aldershot, UK: Ashgate Publishing, 2006), pp 15-31.

Asma Afsaruddin, "The Excellences of Patience: Counter-Narratives about Striving in the Path of God," in the forthcoming J*ihad and Martyrdom in Islamic Thought and Praxis* (Oxford:Oxford University Press, 2011).

Ahmad Ali, *Al-Qur'an:* a Contemporary Translation (Princeton, NJ: Princeton Univ. Press, 2001).

Sumbul Ali-Karamali, *The Muslim Next Door: The Qur'an, the Media, and that Veil Thing* (Ashland, OR: White Cloud Press, 2008).

Abdullahi Ahmed an-Naim, *Toward an Islamic Reformation: Civil Liberties, Human Rights, and International Law* (New York: Syracuse, 1990).

Muhammad Asad, *The Message of the Qur'an* (Dar-Andalus, 1980).

Margot Badran, "Gender in the Qur'an," ed. Jane McAuliffe, *Encyclopedia of the Qur'an,* Vol. 2 (Leiden: Brill, 2002).

Laleh Bakhtiar, *The Sublime Quran* (Chicago: Kazi Publications, 2007).

Ayesha Chaudhry, "The Problem of Conscience and Hermeneutics: A Few Contemporary Approaches," *Comparative Islamic Studies* 2, no 2 (2006): 157-170.

Amina Wadud, *Qur'an and Woman: Rereading the Sacred Text from a Woman's Perspective* (Oxford: Oxford University Press, 1990).

Printed with VOC free, non toxic vegetable oil-based environmentally-friendly ink, on FSC certified paper from well-managed forests and other controlled sources.
Printed by Karunaratne & Sons (Pvt) Ltd. (info@karusons.com).

ISBN 978-955-625-039-8

**Price**